

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 NA-2 இதழ் 1

நாரா நாச்சியப்பன்

வழிப்போக்கன்

அறிஞர் கா. அப்பாத்துரை

நா. பாண்டுரங்கன்

விசு. திருநாவுக்கரசு

சுப்பு - ஆறுமுகம்

தில்லை வில்லாளன்

தே. நாராயணன்

மெ. சுந்தரம்

வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஆடித் திங்கள் 10-ம் நாள்

விலை அணா 5
25—7—49

புகழென்னும் மாமலையில்!

கட்சி கட்சியெனக் கட்டி யழுதீரே—நீர்
கண்ட பலன்தான் இழிவாய் முடிந்ததே அத்தான்?
கட்சிக்குத் தலைவன் தவறின னென்றால்-அதற்குக்
கட்சியைப் பழிப்பது பேதமை யாமடி பெண்ணே!

சீர்திருத்தச் செம்மல் எங்கள் பெரியார்-எனமுன்
செப்பிய பேச்செல்லாம் சிந்தை மறந்ததோ அத்தான்?
யாருக்குத் தெரியும் ஒருபெண் ணாலே-தொண்டர்
யாரையும் நம்பாமற் கெட்டிடுவார் என்றுமுன் னாலே!

பகுத்தறிவுத் தந்தைக்குப் பெண் ணாலே-நெஞ்சு
பாழ்பட்ட தென்று கூறிட லாகுமோ அத்தான்?
கருத்துக்குச் சிந்திக்கும் உரிமை மறுத்தே-அவர்
கண்ட முடிவிற்குப் பகுத்தறி வென்னடி செய்யும்?

இந்து வல்ல திராவிடனே யென்று-உம்மை
எழுதச் சொன்னவர் இந்துவாய்ப் போனதேன் அத்தான்?
சந்தி சிரிக்க வேண்டு மென்றே-அவர்
சாதித்த புன்செயல் மீதிப்பேர்க் கிழிவானது பெண்ணே!

புகழ்ந்து புகழ்ந்து போற்றினீர் அன்றே-இன்று
பொருமிக் கிடக்கின்றீர் அந்தோ பரிதாபம் அத்தான்!
புகழென்னும் மாமலையில் ஏறிநின்றார்-இன்று
பொத்தென்று கீழே விழுந்துவிட்டாரடி பெண்ணே!

— நாரா நாச்சியப்பன்



ஜூலை ஒன்பது துக்கநாள்

1949 ஜூலை ஒன்பது! நமக்குத் துக்க நாள்! திராவிடர்
தம் வரலாற்றிலேயே துயரத்தைத் தீட்டிச் சென்ற நாள்! என்
றும் அழியாத பழியைத் தென்னாட்டிற்குச் சேர்த்து வைத்த
நாள்! மறைக்க முடியாத, மறுக்க முடியாத பிழையைத் திரா
டர் தம் பெருந்தலைவர் இழைத்தார் என்று எடுத்தெடுத்துக்
காட்டும் நாள்! கழக ஊழியர்கள், மெய்த் தொண்டர்கள்,
ஆயிரக் கணக்கானோர், ஆங்காங்கே கண்ணீர் விட்டும் கதறியும்
வேண்டிக்கொண்டும், தம் போக்கை மாற்றாது இன்றுதான்
பொருந்தாத் திருமணம் செய்து கொண்டார் பெரியார் ஈ. வே. ரா.
தம் 72-வயதில் என்று வரப்போகும் இளைஞர்களெல்லாம் படித்
துப் படித்து வருந்த வேண்டிய நாள்!

ஆம். இந்த நாளை நாம் மறக்க முடியாது; அன்று நமக்கு
நேர்ந்துவிட்ட பழியையும் மறைக்க முடியாது. நாம் யாரை
"வெற்றி கொண்ட வேந்தர்" என்று கொண்டாடிவந்தோமோ,
அவரையே அன்று பழமை எண்ணம், சமூகத்திற்கு நஞ்சு என்று
கருதப்பட்டு, பேசப்பட்டு வந்த பொருந்தாத் திருமண ஏற்பாடு
வெற்றிகொண்டு விட்டது. முப்பது வயது நிறைந்த மணியம்
மையாரை அன்றுதான், மிகரகசியமாகப் பெரியார் பதிவுமணம்
செய்து கொண்டுவிட்டார்.

இச் செய்தியைத் தாங்கிவந்த ஏடுகள், தென்னாட்டில்
யாருக்கும் இன்பத்தை, மாறாத மகிழ்ச்சியை நல்கியிருக்க முடி
யாது. அனைவரும் துயரக் கடலில் மூழ்கினர் என்றே சொல்ல
வேண்டும்.

தென்னாட்டு விடுதலை, திராவிடத்திரு நாட்டின் பிரிவினை
நிகழப் போவது உறுதி என்ற எண்ணம் வலுத்துவரும்போது,
தமிழகத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள ஒரே கட்சி
"திராவிடர் கழகம்" என்று வடநாட்டு ஏடுகளே தீட்டும் நிலை
வளர்ந்துவரும்போது, திராவிடர் கழகத் தலைவர், வெண்தாடி
வேந்தர், வாழ்க்கை முற்றும் பொது நலமே குறிக்கோளாய்க்
கொண்ட முதியவர், மாற்றுக் கட்சித் தோழர்களும், அவர் தம்
மாண்பு கண்டு மதிப்பளிக்கும் நிலையில் சிறப்புற்றிருந்த பெரியார்
தாம் இதுவரை பேசிவந்த, எழுதிவந்த சமுதாய சீர்திருத்தக்
கொள்கைகட்கு மாறாக, தம் கட்சி இதுவரை எந்த முறையினைத்
தவறு என்று எடுத்தியம்பி வந்ததோ, அந்த முறைப்படி,
முப்பது வயது நிறைந்த மணியம்மையாரைத் தம் 72-வது வய
தில் மணம் செய்து கொள்கிறார் என்றால், கிழவன் - குமரி திரு
மணத்திற்குத் தாமே எடுத்துக்காட்டாய் விளங்க முன்வந்தா

ரென்றால், இதை விடக் கொடுமை வேறு என்ன இருக்கமுடியும்? மேலும் தாம் செய்துகொண்ட திருமணம சரியென்றும், எதிர்ப்பவர்கள் சூழ்ச்சிக்காரர்களென்றும் சுயநலமிகளென்றும் விளக்கம் தருகிறாரென்றால் கொடுமை கூடுகிறது என்பதைத் தவிர நாம் என்ன கூறமுடியும்?

பெரியார் ஒரு தனிப்பட்ட மனிதர்; அவர் திருமணம் செய்து கொண்டாரென்றால் யாரும் கவலைப்படப் போவதில்லை. தென்னாட்டில் சுயமரியாதை நாதம் அவர் தம் தொண்டால்தான் கேட்கத் தொடங்கியது; சீர்திருத்த எண்ணம் அவர் தம உழைப்பால்தான் பூத்தது என்ற நிலையிலிருப்பதால்தான், நாடு, அவர் தம் ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனிக்க நேருகிறது; கொள்கைக்கு மாறாக, அவர் திருமணம்புரியும்போது நாடுவேதனைப்படுகிறது; அது தவறு எனக் கண்டிக்கிறது. இது இயற்கை.

அம்முறைப்படி, திராவிடர் கழகத் தோழர்கள் பெரியாரின் போக்கு தவறுஎன்று கூறும்படிநேர்ந்திருக்கிறது; கொள்கைக்கு மாறாக நடந்துகொண்டவரின் தலைமையில் இனித்தொண்டு புரியோம் என்று கண்டனம செய்யவேண்டிய அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது; கட்சிக்காகத் தலைவரே ஒழிய, தலைவருக்காகக் கட்சி அல்ல என்று எடுத்துக் காட்டவும, புதுத் தலைமை வேண்டும என்று தீட்டவும் சந்தர்ப்பங்கள் உண்டாகியிருக்கின்றன; தலைவரிடம் நம்பிக்கையில்லை என்று எண்ணற்ற கழகங்கள் தீர்மானிக்கும் நிலை வந்திருக்கிறது.

இந்நிலையில் கட்சித் தொண்டர்களின் கடமை என்ன? அவர்கள் மேற்கொள்ள வேண்டிய போக்கு எப்படி இருக்க வேண்டும்? இவற்றிற்கு நாம் தனியே வெளியிட்டுள்ள தளபதி சி. என். அண்ணாத்துரையின் அறிக்கை விளக்கம தருகிறது. மேலும கழகப் பெரியவர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள, நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துரைகளையும் தனியே திரட்டி வெளியிட்டிருக்கிறோம. அவற்றைக் கூர்ந்து கவனித்தால் திராவிடர்கழக ஊழியர்களின் ஒரு முகமான கருத்து என்ன என்பது யாருக்கும் எளிதில் புலனாகிவிடும்.

ஒவ்வொரு திராவிடக் கழகத் தொண்டரும் இக் குழப்ப நிலையில் என்ன எதிர்பார்க்கிறார் என்று நாம் சிந்திக்க வேண்டும். பெரியார் தம குற்றத்தை மறைக்க, மற்றவர்களைச் சதிகாரர்கள் என்னுமளவுக்குப் பழி கூட்டுவிக்க முயற்சிக்கிறார்; "விடுதலை" பெரியாருக்கு 'ஆதரவு' தேடுகிறது; தோழர் வேதாசலம எவ்வகையிலும் திருமணத்தை நிறுத்தும்படி தீர்மானம் போட்டுவிட்டு, "எது பொருந்தாத் திருமணம்?" என்று அறிக்கை விடுகிறார்; மேலும் சிலர், 'திருமணம் பொருத்தமானது தான்' என்று கூற. தக்க ஆதாரங்களுடன் நிலைநாட்ட "விடுதலை" க்குக் கிடைத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. அச்சிலரைப்பற்றி நாம கவலைப்பட வேணடியதில்லை; திராவிடர் கழகத் தோழர்களனைவரும், (ஒன்றிரண்டு பத்து வரை எண்ணி நீக்கிவிடலாம்) ஒரு முகமாகப்பெரியாரின் இப்போக்கை ஆதரிக்கத் தயாரிலில்லை; ஆனால் அதற்காகக் கட்சியை விட்டுப் போகவும் அவர்கள் விரும்பவில்லை. "கொள்கையை மீறிய தலைவர் கட்சியை விட்டுச் செல்லட்டும்; நாம்

புதுத் தலைவரின் கீழ் அணி வகுப்போம்" என்பதுதான் அவர்களின் ஒரே கோரிக்கை. நிர்வாகக் குழுத் தலைவர் வேதாசலம் அவர்கள் கமிட்டியைக் கூட்டி முடிவு காண்பதுதான் இந்நிலையில் மேற்கொள்ள வேண்டிய ஒரே வழி; அவர் கூட்டாவிட்டாலும் எப்படியோ கமிட்டி கூடியாக வேண்டும். அக்கமிட்டி 10—7—49ல் செய்த தீர்மானம் பயனற்றுப் போயிற்று; புதுத் தீர்மானம் வேண்டும். சிதறுண்டு கிடக்கும் திராவிடர்களுக்கு நல்வழி காட்டும் புதுமுடிவு அங்கே நிறைவேற்றப்பட வேண்டும். இந்நிலையை, நீடிக்க விரும்புபவர்கள், சமரச கீதம் பாடுபவர்கள், நடந்தது, நடந்துவிட்டது மறந்துவிடுங்கள் என்று கூறுபவர்கள், வாரீர் தொண்டாற்ற என்று விண்ணப்பம் போடுபவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிடர் கழகத்தில் ஏன் தாங்கள் சேர்ந்தோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிடர் கழகம் உயரிய இலட்சியங்களைக் கொண்டது; நாட்டு மக்களுக்கு உரிமை தேடித்தருவது என்று கண்டதனால்தான், வேறுபல கட்சிகளிலிருந்தும் நாம் அதில் சேர்ந்தோம். திராவிடர் கழகத்தின் உன்னத இலட்சியங்கள் நம்மைக் கவர்ந்தன; நாமும் திராவிடக்கழகத் தோழரானோம். இப்போது, நம் இலட்சியத்திற்கு ஊனம் நேர்ந்திருக்கிறது. நம் தலைவரே நம்குறிக்கோளைப் புறக்கணித்து விட்டார்; இந்நிலையில் "மீண்டும் பணிபுரிய வாரீரே" என்று அழைப்பது எத்தனை பொருத்தமற்ற வாதம்! குறிக்கோள் பெரிதென்று கருதுபவர்கள், குறிக்கோளைக் 'குப்பை'க்குச் சமமாக மதித்து விட்ட தலைவரின் கீழ் மீண்டும் எப்படித் தொண்டாற்ற முடியும்? குறிக்கோளை மனத்திற்கொள்ளாது, பெரியாரையே நம்பி வந்தவர்கள் வேண்டுமானால், நடந்ததை மறந்து விட முடியும்! நம்மால் முடியவே முடியாது! பழி துடைக்கப்பட வேண்டும். தலைவர் செய்த தவறு கட்சிக்குச் சேரக் கூடாது. கட்சி முன் போல் பணியாற்ற வேண்டுமென்று கருதுபவர்கள் புதுத் தலைமை வேண்டுமென்று கோருவதில் வியப்பில்லை! இக் கோரிக்கையை, விருப்பத்தை, தலைமைப் பதவியைப்பெறச் செய்யும் சூழ்ச்சி என்று புது வர்ணம் பூசித் தடுத்து விடலாமென்று எண்ணுவது பேதைமை! யார் தலைவர் என்பதல்ல எழுந்துள்ள பிரச்னை! தலைவர் தவறு செய்யலாமா என்பதே இன்று நாட்டிலே எழுந்துள்ள கேள்வி. இக் கேள்விக்குச் சரியான முறையில் பதிலளிக்கப்பட்டாக வேண்டும்.

தளபதி அண்ணாத்துரை அவர்களை, இந்நெருக்கடியில் நல்லொளி காட்டும்படி நாடு அழைக்கிறது! 'தலைவர் தவறு' என்ற தாக்குதலால் 'அனாதைகளாக' ஆக்கப்பட்டிருக்கும் இரண்டு லட்சம் கழக உறுப்பினர்கள் அண்ணாவின் 'கட்டளை'யை எதிர்பார்த்திருக்கிறார்கள். பொருந்தாத் திருமணம் செய்துகொண்ட தலைவரின் வழி நடந்தோர் என்ற காரணத்தால் நாட்டினரின் கேலிக்கும் ஏளனப் பேச்சுக்கும் ஆளாகியிருக்கும் திராவிடர் கழகத் தோழர்கள் தங்களைக் கொண்டு நடத்திச் செல்லும் பொறுப்பு இனி 'அண்ணா'வினுடையதுதான் என்ற நம்பிக்கையில் உயிர்வாழ்கிறார்கள். அறிஞர் அண்ணாத்துரை அவர்கள், குழப்பநிலை நீடிக்க இடங்கொடாது, ஆவன செய்ய முனைவார் என்று நாமும் திடமாய் நம்புகிறோம்.

கொள்கை பெரிது!

[பெரியார்—மணியம்மை திருமணம் முடிந்துவிட்டது; நம் இயக்கத்துக்கே பெரும்பழி நேர்ந்துவிட்டது; நாம் எவ்வாறேனும் துடைத்தாக வேண்டும். நமக்குக்கிடைத்துள்ள கருத்துரைகளை பழியை திரட்டித்தந்துள்ளோம்]

அறிஞர் அண்ணாத்துரை வேண்டுகோள்

தோழர்களே,

9—7—49ல், பெரியார் திருமணம் நடந்தேறிவிட்டது. இந்த ஏற்பாடு தெரிந்தது முதல், இதனைக் கண்டித்தும், பொருந்தாத் திருமணம் இயக்கக் கொள்கைக்கு முரண் என்றும், இயக்கத்துக்கே களங்கம் ஏற்படுத்தும் என்றும் விளக்கியும், இந்தப் போக்கைப் பெரியார் மாற்றிக் கொள்ளாவிட்டால், அவருடைய தலைமையை ஏற்றுப் பணிபுரிய முடியாதென்றும், விலகி நிற்கிறோம் என்றும், பல நூறு கடிதங்கள் அவருக்கு அனுப்பப்பட்டன. பல ஊர்க் கழகங்கள் இதுபோன்றே தீர்மானங்களும் நிறைவேற்றியுள்ளன. திருமணம் நடந்தாகிவிட்டது என்பது தெரியாத நிலைமையில், நிர்வாகக் கமிட்டித் தலைவர், திருச்சி, தென்னூர்த் தோழர் வேதாசலம் அவர்கள் வீட்டில் நடைபெற்ற நிர்வாகக் கமிட்டியினர் கூட்டத்திலே, இந்தத் திருமணம் கூடாது என்றும், இயக்க நலன் கருதி இதனைப் பெரியார் கைவிட்டுவிட வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கமிட்டியினர் 32 பேர் வந்திருந்தனர். ஒருவர் மட்டுமே இந்தத் தீர்மானம் தேவையற்றது என்று கூறி, தனித்திருந்தார். திருமணமோ நடந்தேறிவிட்டது. இனிச் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றித் திகைப்பும் குழப்பமும், பரபரப்பும் கலந்த நிலையில் ஆயிரக்கணக்கான கழகத்தோழர்கள், கொண்டு வந்து விடப்பட்டுள்ளனர். பலதிறப்பட்ட யோசனைகளும், யூகங்களும், உலவுகின்றன. பல வதந்திகள்—குற்றம் கூறல்—முகாம் பிரித்தல் ஆகியவை பெருகுகின்றன. கட்சியின் தலைமைப் பதவி, எதிர்கால நடவடிக்கை பற்றி, பலவிதமான யூகங்கள் உலவுகின்றன. இவ்வளவும் 'நான்' தலைமைப் பதவியைக் கைப்பற்றச் செய்யும் சூழ்ச்சி என்ற குற்றச்சாட்டும், அதையே ஆதாரமாகக் கொண்டு, என் ஆருடத்தைக் கணிக்கும் வேலையும் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது போலவே, பெரியாரைத் தூற்றியும் கண்டித்தும் சில வெளியீடுகளும் உலவுகின்றன. கொதிப்பும் கொந்தளிப்பும் வளருவது சில பலருக்கு 'இலாபம்' என்ற முறைப்படி, தூபமிடும் காரியம், இருபக்கமும், மும்முரமாக நடைபெறுகிறது. இந்நிலையில், தெளிவும் அமைதியும், திடமனதும்தான், முக்கியமாகத் தேவை. இவை, கெடும் விதமான எந்தக் காரியத்திலும் எவரும் ஈடுபடலாகாது என்பது என்வேண்டுகோள். சூழ்நிலை மேலும் கெடுவதற்கு ஆக்கம் அளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருமணம் நடைபெறுவது கூடாது, இது நிறுத்தப்பட்டு, நாம் எப்பொழுதும் போல், பெரியார் தலைமையிலே கழகப் பணி புரிய வேண்டும் என்ற நல்லெண்ணத்திலிருந்து, சிறிதும் வழுவாதபடியே தான், கடைசிவரை முயற்சி செய்தோம். திருமணம்நடந்தேறிவிட்டது. இனிச் செய்யவேண்டியது என்ன என்பதை, அவசரமும் ஆத்திரமும் இன்றி, தூண்டி விடுவோர், தூபமிடுவோர், சிண்டு முடிந்துவிடுவோர், கண்டதைக் கிளறிப் பார்ப்போர்,

சந்தி சிரிக்கவைப்பவர் என்போருக்கு இரையாகாமல், யோசித்துத் தீர்மானிக்க வேண்டும். இந்தத் திருமணம், இயக்கக் கொள்கைக்கு முரண்பட்டது, இயக்கத்தைக் கெடுக்கக் கூடியது, எனவே இச்செயலை, கழகத்தவர் ஆயிரமாயிரவர் வேண்டாம் வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், விடாப்பிடியாகச் செய்து முடித்துவிட்டவரின் தலைமையிலே இருந்து பணியாற்ற முடியாது, அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரை, கழகப் பணியிலிருந்து விலகியே இருப்போம் என்ற கருத்தை, ஏற்கெனவே தெரிவித்தனர், பலர், பல கழகங்கள். அதே முறையில் மேலும், எவ்வளவு கழகங்கள், தோழர்கள் இதே கருத்தைக் கொண்டுள்ளனர் என்பதை அறிய ஆவல் கொண்டவனாக இருக்கிறேன். இதை அறியப் பொதுக் கூட்டங்கள் போடுவதோ, கண்டன நோட்டீசுகள், மறுப்புகள் வெளியிடுவதோ, நிலைமையைத் தெளிவு படுத்தாது. ஆகவே, அவரவர்களும் நிலைமையை நன்றாகச் சிந்தித்து, தனித்தனியாக முடிவு செய்து, தங்கள் முடிவைத் தெரிவிக்கக் கோருகிறேன். ஒரு குறிப்பிட்ட அளவு, கழகத் தோழர்கள் இக் கருத்துடன் உள்ளனர் என்பதற்கான ஆதாரம் கிடைத்ததும் அக்கருத்துடையவர்கள் கூடிக் கலந்து பேசி, மேலால் எம்முறையில் நடந்து கொள்வது என்பதுபற்றி முடிவு செய்யலாம். அதுவரையிலே, இந்தக் கருத்தைக் கண்டறியும் காரியந்தான் நடைபெறவேண்டியிருக்கிறது, அமைதியுடன் ஆத்திரமற்ற முறையில். இந்தத் திருமணத்தைத் தலைவர் கைவிடாத பட்சத்தில், அவருடைய தலைமையின் கீழுள்ள கழகத்திலே பணியாற்ற முடியாது என்ற கருத்து, ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருப்பது, குறிப்பிடத்தக்கது தான், என்ற போதிலும், மேலும் வேண்டும். அதற்குப் பிறகுதான், அத்தகைய அன்பர்கள் ஒன்று கூடிக்கலந்து பேசி, ஒரு திட்டம் தீட்டமுடியும். இதற்கிடையில், பெரியார், உடமையில் வழக்கிலே, சர்க்காருடைய அடக்குமுறைக்கு ஆளாக நேரிடலாம் என்ற செய்தியும் வருகிறது. அவ்விதம் நேரிட்டால், அவருடைய விடுதலைக்குப் பிறகே, நாம் கூடிக் கலந்து பேசுவதும் கண்ணியமான முறை. விரோதத்தைக் கிளப்பி விடுவதும், தப்பெண்ணம் கண்டுபிடித்து விடுவதும், சுலபம்—ஆனால் நேர்மை அல்ல. பொறுத்திருந்து, தீர யோசித்துக் காரியம்செய்வது, எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியது. பிரச்னை, தனிப்பட்ட மாச்சரியம், குரோதம் ஆகியவைகளை வைத்துக்கொண்டு, நடத்தும் விளையாட்டல்ல, பல ஆண்டுக்காலமாக இருந்துவரும், பந்தம், பாசம், ஆகியவை, இந்த ஒரு வேண்டுகோளை அவர் மதிக்கக்கூடப் பயன்படவில்லையே என்ற நெஞ்சு நோகும் நிலையிலுள்ளவர்கள், இனிக் கொள்கைக்கு முரண்பாடின்றி, எப்படிப் பணிபுரிவது, எத்தகைய பணிபுரிவது, என்ற சிக்கலில் தள்ளப்பட்டிருக்கும் பிரச்னையாகும். ஆகவேதான், அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். 'நானே அவசரமாகக் காரியம் செய்துவிட்டேன்' என்று சிலரால் எண்ணப்படுகிறேன் என்றால், இந்தப் பிரச்னையிலே, திடீர் முடிவுகள் செய்வது, எவ்வளவு தீமை தரக்கூடியது என்பதைத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம், நமது நோக்கத்தைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம்—பலரும் அதை ஆதரித்திருக்கிறார்கள்—அந்த ஆதரவாளர்களின் தொகையை, அளவை மேலும் அறிந்து, பிறகு, கூடிக் கலந்துபேசி, ஒரு நல்ல முடிவுக்கு வரலாம், அதுதான் முறை; அதுதான் என்வேண்டுகோள்.

சி. என். அண்ணாதுரை

புரட்சிக் கவிஞரின் அறிக்கை

பெரியாரின் நோக்கம் மணியை மணப்பது; சொத்துக்கு அந்தப் பேர்வழியை வாரிசாக்குவது மட்டுமல்ல. நமக்குப்பின் திராவிடர் கழ

கம் என்பதொன்று இருத்தல் கூடாது. அதன் சொத்து யாவும் தாம் விரும்பும் இடத்திற் சேர்த்து விடவேண்டுமென்பவையும் தான் அவர் நோக்கம். இதைத் தற்காலிக மாக மறைக்கப் பல் சொல்வேலை நடத்துவார். நம்புதல் தீமை பயக்கும். பெரியார் இந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முதலில் நம்மை அச்சுறுத்த எண்ணுகிறார். அதற்குத்தான் காங்கிரஸ் பிரபல பார்ப்பனர்களைக் கண்டு பேசுவதும் அவர்கள் தமக்கு ஆதரவாயிருக்கிறார்கள் என்று நமக்குக் காட்டுவதுமாகிய நாடகத்தை நடத்துகிறார். காங்கிரஸிலிருந்து வெளியேறியபோது இதே முறையில் தான் அப்போது செல்வாக்கிலிருந்தவர்களாகிய ஜஸ்டிஸ் பிரமுகர்களைக் கண்டு பேசினார் என்பது நமக்கு நினைவிருக்கிறது. இனி எந்தக் காரணத்தாலும் பெரியாரைச் சேர்க்கக்கூடாது. சேர்ப்பதால் அவர் இழந்த கௌரவத்தையும் மீட்கமுடியாது. நம் சுயமரியாதையையும் காத்துக் கொள்ள முடியாது......

பாரதிதாசன்

கமிட்டியைக் கூட்டுங்கள்

சென்றதடவை நம் கமிட்டிக் கூட்டம் கூடி எவ்வித முடிவும் இன்றி கலைந்தோம், பெரியார் திருமணமும் நடைபெற்று விட்டது, அதற்குப்பின் 13—7—49, விடுதலையில் பெரியார் வெளியிட்ட அறிக்கை, பிரச்சினையை மிகவும் சிக்கலாக்கி விட்டதுடன் இயக்கத்தில் பெரியாருக்குப் பிடித்த மில்லாத தலைவர்களைச் சதிவழக்கில் ஈடுபடுத்தக்கூடியதாக இருக்குமோ என்று பயப்படக் கூடிய அளவுக்குப் போய்விட்டது. இதற்கிடையில் திரு. அண்ணாத்துரை பெரியார்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதாய்ப் பத்திரிகைச் செய்திகள் வந்திருக்கின்றன. இவை எல்லாம் மிகவும் வருந்தத்தகக சம்பவங்கள், நாம் இதுவரை செய்த வேலைகள் எல்லாம் பயனற்றுப் போய்விடுமோ என்று பயப்பட வேண்டியதிருக்கிறது. மக்களிடத்தில் ஏற்பட்ட உற்சாகம் குன்றிக் கட்சி சிதைந்து போய்விடவும் கூடும். ஆகையால் நம்முடைய கமிட்டியைச் சீக்கிரம் கூட்டி ஏதாவது முடிவு செய்ய வேண்டும். அதற்குவேண்டிய ஏற்பாடு உடனே செய்யக் கோருகிறோம்,

சோ. நீதிமாணிக்கம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ம. தி. க. நி. கு. உறுப்பினர்கள்

அவசரப்பட வேண்டாம்!

திராவிடக் கழகத் தங்கை பெரியார் அவர்கள் சென்ற 9—7—49 ல் செய்துகொண்ட திருமண சம்பந்தமாகக் கழகத் தோழர்களிடையே பெருத்த கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கிற தென்பதை நான் உணர்கிறேன், அக்கருத்து வேற்றுமைகளை நல்வழி முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்பது என் எண்ணம். பெரியார் அவர்கள் அறிக்கையின் வாயிலாகவும் விளக்கத்தின் வாயிலாகவும் அவர்கள் சொன்ன வார்த்தைகள் - தாம் செய்து கொள்ளும் திருமணத்தின் மூலம் தன் சொத்துக்களுக்கு வார்சும் கழக சொத்துக்களுக்கு ஒரு டிரஸ்டும் நியமித்து அதன்பொறுப்பில் ஷை சொத்துக்களை ஒப்புவித்துக் கழகப் பணியைத் திறம்பட நடத்திச்செல்வதற்கும் வழிதுறை செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி முதல்காரியமான திருமணம் நடந்துவிட்டது, அதைப்போலவே இரண்டாவது சொன்ன கழகச் சம்பந்தமான டிரஸ்டு பத்திரம் அவர்களால் செய்யப்பட வேண்டும். அதையும் உடனே செய்திருக்கவேண்டும். அது இதுவரையில் செய்யாமலிருக்கக் காரணம் தெரியவில்லை, என்றாலும் கூடிய சீக்கிரம் அதுவும் நாள் கணக்கில் அந்தப் பத்திரம் நகல் வெளியிடப் படலாம்என்று எதிர்பார்க்கிறேன். இயக்கத்தின்பால் செய்யப்பட்ட ரிகார்டுகள் தலைவரால் செய்யப்பட்டது சரியில்லை என்று பட்டால்

உடனே தலைவர் அவர்களைக் கொண்டு மாகாண காரியக்கமிட்டியைக் கூட்டச் செய்வோம். தலைவர் கூட்டவில்லையானால் காரியக் கமிட்டித் தலைவர் அவர்களைக் கொண்டு கமிட்டிகூட்டத்தைக்கூட்டும்படி ஏற்பாடு செய்வோம் அது முடியாமல் போனால் நான் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டி நிலைமையைப் பற்றி ஆர அமர ஆலோசித்து முடிவு செய்யலாமென்பது என் கருத்து. அந்த முடிவின்பேரில்மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்கள் நடக்கவேண்டிய முறைகள் எல்லாம் ஷை காரியக் கமிட்டியால் ஏற்பாடு செய்யப்படுகிற முறையில் நாம் கழகத் திட்டத்தை நடத்திச் செல்லலாம்என்று எண்ணுகிறேன்.

கே. கே. நீலமேகம்
ம. தி. க. நி. கு. உறுப்பினர்

காசுதான் முக்கியமா?

நடந்த மணம், பொருந்தா மணம் அல்ல — சரியான மணந்தானென்று விடுதலையும் குடியரசும் மாறி மாறி விரிவுரை கூறுகின்றனவே தவிர, மற்ற யாரும் கூறுவதாகத் தெரியவில்லை. பெரியார் அவர்களே நான் செய்ய இருக்கிற (கல்யாண) ஏற்பாட்டால், கட்சிக் கொள்கைக்கு மாறி நடப்பது போலவும், கட்சியே அழிந்துவிடுகிற மாதிரியும் தோன்றலாம் - என அறிக்கை விட்டிருக்கிறார். இதிலிருந்து பெரியார் அவர்கள் தன் திருமணம் "பொருந்தாமணம்" என்பதை ஒப்புக்கொண்டுவிட்டார். குற்றவாளியே தன் குற்றத்தை ஒப்புக்கொண்டபின் மற்றவர் கூற்றுக்கு மதிப்பே கிடையாது. பெரியாருக்கும் மணியம்மைக்கும் 42 வருடங்கள் வித்தியாசம் இருந்தாலும், மனம் ஒப்பிய மணம்தானே - எனச்சிலர் கூறுகின்றனர். மனம் ஒப்பிய திருமணமா, ஒப்பாததா, என்பதல்ல பிரச்சினை. வயோதிகரும் வாலிப மங்கையும் மணம் புரியக்கூடாது என்பதுதான் நம் கழகக் கொள்கை. வாழ்க்கையிலேயே வெறுப்புக்கொண்டு விபரம் தெரிந்த ஒருவன் மனம் ஒப்பி விஷங்குடித்துத் தற்கொலை செய்து கொள்ள எண்ணுகிறான். மனம் ஒப்பிச் செய்கிறான் என்பதற்காக யாரும் அவனைச் சாக விடுவதில்லை. அதைப்போலவே பெரியாரின் திருமணமும் பொருத்தமற்றது; ஏற்கக்கூடியது அல்ல. கல்யாணம் கலவிக்காக அல்ல; காசுக்குப் பாதுகாப்புக்காக—என்றும் கூறப்படுகிறது. இதையே உண்மையாக ஒப்புக்கொள்ளலாம். ஆனால் — காசு பெரிதா? கழகக் கொள்கை பெரிதா? – இதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெரியார் சொத்து ஐந்துலட்சமல்ல -ஐம்பதுலட்சமாகவே இருக்கட்டும். அதுவா முக்கியம்? பெரியார் பாடுபட்ட லட்சியம் – பலமுறை சிறை சென்று வளர்த்த லட்சியம் – பல தோழர்களைப் பலியிட்டுப் பாதுகாத்த லட்சியம் - பாழாக்கப்படுவதா? ஐந்து லட்சத்திற்காகப் பெரியார் அவர்கள் கொண்ட கொள்கைக்கு மாறாகப் பொருந்தா மணம் செய்தது, குற்றம்! குற்றம்!! குற்றத்திற்குப் பரிகாரம், பெரியார் அவர்கள் இயக்க விசேஷ மாநாட்டைக் கூட்டி, வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்து, தான் ஒதுங்கி ஆலோசகராக இருப்பதுதான், சரியானதாகும், எட்வர்ட் மன்னர் மகுடம்துறந்து வாழ்வதைப் போல. இதற்கு மாறாகப் பெரியார் அவர்கள் செய்கிற ஒவ்வொரு காரியமும் நம் கழகத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு ஆதரவளிப்பதாகவே இருக்கும். எனவே திராவிடர்கள் அனைவரும் ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசரமும் அவசியமும் ஆகும்.

— ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ஆசிரியர் "தனியரசு"

வைதீக ஆரியத்துக்கு மற்றுமோர் வெற்றி !

மறுமணத்திற்கு 'விடுதலை' தரும் மாய விளக்கங்கள் உண்மையில் குழப்பங்களேயாகும், வைதிக ஆரி

யம் பல தெய்வவணக்கம், சாதி முறை, தீண்டாமை, பெண்ணடிமை உருவ வணக்கம் ஆகிய கொடிய தீமைகளுக்கு இத்தகைய 'புது அறிவு' விளக்கங்கள்தான் தருகின்றன. வர்ண ஆசிரமதர்மம், தொழில் பாகுபாடுமுறை (Division of Specialisation of Labour) என்ற பெயர் கூறித்தான் மகாத்மாக் காந்தி சாதிமுறையை ராமராஜ்யச் சிறப்பாகக் கருத முற்பட்டார். 'இந்து' என்ற பெயரைத் தன்மான இயக்கத்தவரால் எதிர்க்கப்பட்ட சைவ வைணவர்கூட ஏற்கமாட்டார்கள். தன்மான இயக்கத் தலைவரின் புரட்சிகரமான வாரிசுதேடும் முறை அவரை "இந்து பகுத்தறிவு வாதி" என்று தம்மைக் குறிப்பிட வேண்டும்நிலைக்குக்கொண்டுபோய் விட்டது. இத்தகைய சொந்த விவகாரங்கள் பெருகுமானால் பகுத்தறிவியக்கம் நம்மை எங்கே கொண்டு போய் விடாது? இம் மணத்தால் பலர் புண்பட்டிருக்கலாம். ஆனால் முற்றிலும்சுட்டெரிக்கப்பட்ட மனத்தையுடையவராய்க் கண்ணீருக்கும் வகையற்றிருப்பவர்கள் ஈ. வே. ரா'வின் தனித்தொண்டர்களும் அவரைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டவர்களுமே யாவர். மணச் செய்தியைவிட இயக்க அன்பர்களையும் தமிழ் நாட்டினரையும் புண்படுத்துவது மணவினை ஏற்பாட்டு முறைகளும் அதற்கான விளக்கங்களுமேயாகும். தலைவரின் 'நம்பத்தகாதவர்கள்' ஜாபிதாவில்இயக்கத் தலைவர்களும் அவர் தனித் தொண்டர்களும் மட்டுமல்ல, தமிழர், சீர்திருத்த அனுதாபிகள் யாவருமே அடங்கிவிட்டனர்—இன்று விளக்க அறிக்கையிடுபவர்களும் மண ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவரும் கூடத்தான்! நமக்குத் தரப்பட்ட பகுத்தறிவொளியைப் பகுத்தறிவியக்கத்தின் மீதே சற்றுத் திருப்பிப் பார்த்தால் ஈ. வே. ராவின் திருமணமும் இயக்கத்தையும் நாட்டு மக்களையும் அவர் நடத்தும் வகையும் இரமண மகரிஷியின் முறைகளிலிருந்தும் விளக்கங்களிலிருந்தும் வேறுபட்டனவல்ல வென்றே கருதத்தக்கவையாயுள்ளன.

கா. அப்பாத்துரை

பெரியாரின் மெய்போலும்மே! மெய்போலும்மே!!

திராவிட இயக்கத் தந்தை பெரியாரை இருபதாம் நூற்றாண்டின் மார்ட்டின் லூதர், சாக்ரடீஸ், ரூசோ, லெனின், பிராட்லா, இங்கர்சால், கார்ல் மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், பெட்ராண்டு ரசல், பெர்னட்சா, தேவேந்திரநாத் டாகூர், ராஜாராம் மோஹன் ராய், திருமூலர், திருவள்ளுவர் என்றெல்லாம் 1927ஆம் ஆண்டு 1வது படிவம் பள்ளி மாணவனாய் இருந்த காலம் முதற் கொண்டு என் நாவாரப் போற்றிப் புகழ்ந்து, பேசி, எழுதி என்னாலியன்ற அளவு அவர் தோற்றுவித்து நடத்திவந்த தன்மான இயக்கத் தொண்டனாய் உழைத்து வந்திருக்கிறேன். எந்தக் கைமாறும் கருதாது வாழ்க்கை நலனைக் குறைத்துக்கொண்டு "எல்லார்க்கும் பொல்லனாய்" உழன்று வருகிறேன். பெரியார் தன் சொந்த சொத்துக்கு வாரிசு என்ற முறையில் இயக்கத்தை எதிர்காலத்தில் கொள்கை நடத்தாது. "பணம் தான் நடத்தும்," "காங்கிரசை இனி 20 கோடி காந்திநிதிதான் நடத்தும்" என்ற சூசனை காட்டி 31 வயது மகளாய் வந்த மணியம்மையை மனைவியாய் (நமது மதிப்பிற்குரிய நிர்வாகத் தலைவர் T. P. வேதாசலம் கூறுகிறபடி உடல் சம்மந்தமில்லாத (Platonic marriage) செய்துகொண்டார். பணம் இயக்கத்தை நடத்தாது, இயக்கம் பணமும், பலவும் நல்கும் என்ற கருத்துடையவன் நான். பெரியார் தான் பிரசாரம் செய்து வந்த கொள்கையை "பொருந்தா மணம்" மூலமும் தன்னைப்பின்பற்றுபவர்களைப் பொறுப்பற்றவர்கள், பதவிப் பித்தர்கள், உள் எதிரிகள், சதிகாரர்கள், கொலைஞர்கள் என்றெல்லாம் கோபத்தால் தாறுமாய் எழுதி என்

போன்ற ஊழியர்களின் மனத்தைப் புண்படுத்தி இனி இறந்தாலும் அவர் தலைமையில் தொண்டாற்ற முடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கிவிட்டார். அவர் சர்வாதிகார மனப்பான்மை உடையவர் என்ற பழியிலிருந்து, பொதுப் பணத்தை எவர் கொடுத்தனரோ அவர்களின் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்துவிட்டு திராவிடக் கழகப் பணியிலிருந்து விலகுவதுதான் சிறந்தது. வீண் பிடிவாதம் பிடித்து, சில புல்லுருவிகளின், ஆமாம் சாமிகளின் மொழி கேட்டு வறட்டு வாதம் செய்வது தகாது. கழகத் தனி மாநாடு கூட்டித் தன்னிடம் நம்பிக்கையைப் பலப் பரிட்சை செய்து பார்த்து விலகும்படி கேட்டுக்கொள்கிறேன். எல்லோரையும் தூற்றிவிட்டு "பொது மக்கள்", "நீண்ட காலத் தொண்டர்கள்" என்று யாரைக் குறிப்பிடுகிருரோ யான் அறியேன். கழகம் நடந்தே தீரும். சமுதாய இயக்கம் என்ற பயம் நீங்கி இனி அரசியல் இயக்கமாகப் பரிணமித்து ஐந்து ஆண்டில் இன்பத் திராவிடத்தை அடைவோம் என்பது உறுதி. வாழ்க சீர்திருத்த இயக்கம் வாழ்க தொண்டர்கள் தம் தூய உழைப்பு!! ஒழிக தூற்றல் பிரச்சாரம்!!! ஒழிக பணப் பேராசை!!!! ஒழிக கொள்கைக் கொலை!!!!!

— எஸ் ஆர். சுப்பிரமணியம்
ம. தி. க நி. கு. உறுப்பினர்

நம்மை இழந்தார்

பெரியாரின் பொருந்தாத் திருமணம்பற்றி நாம் எல்லோரும் ஏமாற்றப்பட்டோம். நம்மை அவர் இழந்துவிட்டார். நாட்டைவிட நம்மை எல்லோரையும்விட அவருக்கு நயமாகத் தோன்றியது இத்திருமணம், அல்ல; மயக்கம் நாட்டிலே அவரது தற்போதைய செய்கையை ஏற்றுக்கொண்டாலும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முடிவாகக் கூறுகிறேன். எப்படியோ, நிகழ்ச்சி முடிந்துவிட்டது. இனி என்போன்றவர் கட்சி அவர் தலைவரில்லை என்பதும் உறுதியாகிவிட்டது. கிடைக்க முடியாத தலைவர் என்றிருந்ததும் இப்படிப்பட்டவர்களைக் கொண்ட தலைவர் பெரியார் என்பதும் இனி இல்லை என்று கூறுவதோடு, இதை முடிக்கிறேன்! எனவே பெரியார் நம்மை இழக்க நேர்ந்ததே ஒழிய நாம் அவரை இழக்கவில்லை. சில வரிகளில் எப்படி முடிப்பது இக் கொடுமையை

இராம. சுப்பையா
தி. க. ம. தி. உறுப்பினர்

புதுவேகம் வேண்டும்

ஆயிரமாயிரம் காளைகளின் கண்ணீரைத் துச்சமாக மதித்து, குடந்தைத் தெருவிலே சிந்திய ரத்தத்தை-குடும்பத்தை வெறுத்துக் கொள்கை வெறியேறித் திரிந்த இளம் நெஞ்சங்களை-தன் கடைக்கண்ணுல் கூடப் பார்க்க மனமின்றி இரக்கமெனும் ஒரு பொருளிலாத்தலைவரான பெரியார் தன் திருமணத்தை - பொருந்தாத் திருமணத்தை முடித்துக் கொண்டார் என்பதை வருங்கால வரலாறு கூறும். வருங்காலத் திராவிட வரலாற்றிலே தன் முக்கியத்தைச் சிவப்புக்கோடுகள்கிழித்து அழித்துக்கொண்டார் பெரியார். ஓராண்டு காலமாகவே பெரியாரின் போக்கு, இயக்கத்தை அழிவை நோக்கி இழுத்துச் சென்றது. இயக்கத்தொண்டர்கள்பற்றிய அறிக்கைகள், தளபதி அழகிரியை மரணப் படுக்கையில்கூடப் பார்க்க மனமின்றி ஒரத்தநாடு சென்றவர் தஞ்சை வழியே திரும்பும்போது தஞ்சையில் அழகிரியைப் பார்க்காது சென்ற கல் நெஞ்சத் தன்மை இவைகளை யெல்லாம் சிந்திக்கும் போது பெரியாரின் திருமணம் ஆச்சரியகரமான விஷயமல்ல. நம்முடைய மானம் நிலைக்க வேண்டுமானல் **கட்சியிலே புதுவேகம் புறப்பட வேண்டும்.** இல்லாவிடில், ஆளுக்கொரு கோப்பை நஞ்சு! எல்லோரும் தற்கொலை செய்துகொள்வதைத்தவிர வேறுவழி என்ன இருக்கிறது, தோழரே! மு. கருணநிதி

ஒரு சந்தேகம்

"ஹிந்து பகுத்தறிவுவாதி" என்று ரிஜிஸ்டர் பத்திரத்தில் குறிப்பிட்

டிருக்கிறாரே பெரியார், ஹிந்து மதத்தில் பகுத்தறிவு வாதிகளுக்கும் இடமிருக்கிறதா? அப்படி இருந்தால் இந்து மதத்தை அழிக்க அவர் இத்தனை நாள் கச்சை கட்டிக்கொண்டு திரியவேண்டிய காரணம் என்ன?

டி. கே. சீனிவாசன்

கொள்கைக்குத்தான் தலைவர்

பெரியார் தம் திருமணத்தை முடித்துக்கொண்டார். அதுமட்டுமல்ல, பகுத்தறிவின் பழிச் சின்னமாகவும் தன்னை ஆக்கிக்கொண்டார். பழிச் சின்னமானாலும் பற்றி நடக்கும் பக்த கோடிகளும் சிஷ்யக் குஞ்சுகளும் உண்டு என்ற திண்ணமும் கொண்டுள்ளார். குற்றத்தைச் சுட்டிக் காட்டுவோருக்கு எழுதுகோலிலே நஞ்சு தோய்த்து விளக்கம் தருகிறார். கொள்கைக்குத் தலைவரே யன்றித் தலைவருக்காகக் கொள்கை யில்லை. நான் கொள்கைக்காரன்.

— கோவை. இளஞ்சேரன்

கொள்கை பெரிது!

ஈ. வே. ரா. வின் உழைப்பிற்கு நம் நன்றி... .. அவரின் உயரிய கொள்கைகளுக்குக் கோடி கோடி வணக்கங்கள்... அவரின் தளராத தொண்டிற்கு நம் வாழ்த்துக்கள் ... இலட்சியப் பாதையில் அவர் கண்ட வெற்றிகளுக்கு நம் பாராட்டுதல்கள் ... என்றென்றும் உண்டு. ஆனால் இன்று அவரிடம் நம் அன்பு குறைந்துவிடவில்லை ... கொள்கைகளின் மீது நாம் கொண்டுள்ள உறுதியும், நம்பிக்கையும் அந்த அளவைத் தாண்டி நிற்கின்றன! ஆகவே கொள்கையைக் கொன்ற ஈ. வே. ரா. வை விரட்டி யடிக்கவும் நம் மனம் அஞ்சவில்லை ... அஞ்சக் கூடாது!

— தில்லை-வில்லாளன்

சீர்திருத்தமா?

'சீர்திருத்தம்' என்ற சொல்லுக்குப் பொருட் செறிவூட்டியவர், செயலாற்றிக் காட்டியவர் பெரியார். அவராலே அந்தச் சொல்லுக்குப் 'பித்தலாட்டம்' என்று பொருள் வந்துவிடும் போல் காட்டுகிறது அவரது திருமண விழா! 'கொண்டதை விடாச் சண்டித்தனம்' அவரது கொள்கைகளுக்கும் வெற்றிக்கும் ஆணிவேராக இருந்தது. ஆனால் இன்று, அதே பண்பு அவரை 'மணியம்மை' என்ற படுகுழியில் இறக்கிவிட்டது.

— மு. அண்ணாமலை

திடுக்கிட்டோம்

... முதலில் நம்பவில்லையேயானாலும், தங்கள் அறிக்கை, விளக்கவுரைகள் மூலம் பார்த்துத் திடுக்கிட்டேன். நான் மட்டுமல்ல, பம்பாயில் வதியும் திராவிடர்கள் யாவருமே. இப்பொருந்தா மண நிகழ்ச்சியை நம் எதிர்க்கட்சியாளர் ஏளனமாகச் சொல்லும் பொழுது எங்கள் இதயம் வெடிப்பது போலிருக்கிறது ... ... (பெரியாருக்கு அனுப்பிய கடிதத்தில்)

— எஸ். பெரியசாமி
பம்பாய்.

உலகம் ஏமாந்தது

கொள்கைக்காக மனிதர்கள் கொலையையே வரவேற்கும் போது — இறப்பையே இன்முகத்துடன் எதிர்கொண்டழைக்கும்போது — வார்சு உரிமைக்காகவும், பணத்திற்காகவும் இத்துணை நெடுங்காலமாகப் பேசிவந்த கொள்கைகளுக்கு முரணாகப் போவது — அதிலும் கொள்கையைத் தோற்றுவித்த தானே போவது மிகவும் இகழ்ச்சிக்குரியது; பெரு நகைப்பிற்கிடமானது. "கோடிப் பணம் போவதாய் இருந்தாலும் கொண்ட கொள்கையை விடாமல் இருப்பவன் பெயரே உலக வரலாற்றில் இடம் பெறும்;

அவனுடைய கட்சியும் உலகில் நீண்ட நாள் தழைக்கும்'' என்பதை சிலுவையில் நின்ற ஏசு, நஞ்சு உண்ட சாக்ரடீஸ், கொல்லப்பட்ட ஆப்ரகாம் லிங்கன், கொலையை ஏற்ற காந்தியார் ஆகியோர் காட்டிச் சென்றனர். இவர்கள் கொள்கைக்காக இறந்தவர்கள். ''இப்படித்தான் பெரியாரும் இருப்பார்'' என்று உலகம் எதிர்பார்த்தது. ஆனால் ஏமாந்தது.

— வித்துவான் மெ. சுந்தரம்

தலைமையினின்றும் விலகவேண்டும்

எந்த ஒரு கொள்கை, இயக்கத்தில் பிரதானமாயிருந்ததோ அதே கொள்கையைச் சமாதி வைத்துவிட்டார், அதன் தலைவர் கிழவர் மணம் புரிவதைக் கிண்டல் செய்தவாயே அதற்குச் சப்பை கட்டுகிறது. வளர்ந்து வரும் அருமையான இயக்கத்தை, மன்னிக்க முடியாத மகத்தான தவறு மூலம் நிலைகுலையச் செய்துவிட்டார் பெரியார். இது நடந்து விட்டது. இனி, நாம் மேலும் சீர் திருத்தத் தொண்டாற்ற வேண்டுமானால் பெரியார் தலைமையிலிருந்து விலகி, உருக் கொள்வதுதான் சரியான வழி.

— கண்ணதாசன்

தலைவரா? கொள்கையா?

பெரியார் திருமணம் நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக நடந்தேவிட்டது; நமது கொள்கைக்கு முரணாக நடந்தேவிட்டது. இனி நம்முன் இருக்கும் பிரச்னை ''தலைவரா'' ''கொள்கையா'' என்பதுதான். ஐயமின்றிச் சொல்லுகிறேன் கொள்கை தான். தலைவர் வருவார் போவார். கொள்கை அப்படியல்ல. அதற்காக ஆவனசெய்ய வேண்டியதுதான் நம் நீங்காக் கடமை.

கண இராமநாதன்

நல்ல பாடம்

இத்தனை ஆண்டுகளாக நன் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்கி வந்த 'பெரியார்' இன்று, தம் திருமணத்தால் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார். அதாவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டுவிட்டார். ஒரு தலைவனிடத்தில் அளவுக்கு மீறிய நம்பிக்கை வைப்பது எவ்வளவு தவறானதென்பதையே இந் நிகழ்ச்சி காட்டுகிறது. நமக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுத்து, புது வழியையும் காட்டி இருக்கிறது.

இளமைப்பித்தன்

சோகக் கண்ணீர்

திராவிடத்தின் தந்தை, சமூக மூடநம்பிக்கையின் எதிரி என இதுகாறும் போற்றப்பட்ட ஈ.வே.ரா.ஐயோ! இன்று வைதீகத்தின் சிகரமாய்ச் செல்வத்தின் இருப்பிடமாய் இருக்கும் ஒரு மனிதன் கூடச் செய்யத் துணியாத ஓர் காரியத்தை — கிழவன் - குமரி திருமணத்தை — அன்பைக் காட்டியல்ல அற்பமான ஐந்து லட்சம ரூபாயைக் காட்டிப் பகுத்தறிவாளரின் பலமான எதிர்ப்பிற்கும் அஞ்சாது வீரத்துடன் செய்து முடித்தமை குறித்துக் கண்ணீர் சொரிகிறோம். ஆனந்தக் கண்ணீரன்று. அனைவரின் கேலிப் பேச்சைக் கேட்டு உள்ளம் குமுறியெழும் சோகக் கண்ணீர்.

K. சிவானந்தவல்லி

நஞ்சு கலந்தார்

கடந்த முப்பதாண்டாக மக்களின் பேராதரவு பெற்று ஒப்

பற்ற தலைவராக விளங்கியபெரியார் ஈ. வே. ரா. இன்றுமுன் பேச்சுக்கு முரணாகவும், கழகக் கொள்கைக்கு விரோதமாகவும், கழகத் தலைவராக இருந்தும், சொந்த விவகாரம், என் சொத்துக்கு வார்சு, கழக சொத்துக்குப் பாதுகாப்பு என்பன போன்ற பல சொற்களைக்கூறி மக்களை நம்பச் செய்துவிடலாம் என்ற எண்ணங்கொண்டு அசட்டுத் தைரியத்துடன், பல தகுதிகளை இட்டுங் கட்டியுங் கூறி மணியம்மையைக் கரம் பிடித்து மனைவியாக்கியதால் கழகக்கொள்கையில் நஞ்சு கலந்தார்.

த. மா. திருநாவுக்கரசு

நம்பிக்கையில்லை

ஆகஸ்ட் 15-ஐ ஆதரித்து எழுதிய காரணத்திற்காக அண்ணாத்துரையைப் புறக்கணித்த பெரியார், இன்று ஆரிய இனத் தலைவராகிய ஆச்சாரியாரைக் "குரு" வாகக் கொண்டது ஒரு குற்றம். தாடிக்கொரு தீமை எனில் ஓடிக் குதித்து வந்து உயிரேனும் தந்து காப்போம் என்றிருந்த உண்மைத் தியாகிகளைச் "சதிகாரர்" என்றது இரண்டாவது குற்றம். இருபது ஆண்டுகட்கு மேலாக ஆயிரம் ஆயிரம் மேடைகளில் எடுத்தெடுத்துப் பேசப்பட்டதும், சுயமரியாதை இயக்கத்தின் உயிர் நாடியும் ஆன கொள்கையைப் புறக்கணித்து விட்டுப் பொருந்தாத் திருமணம் செய்துகொண்டது மூன்றாவது குற்றம். மன்னிக்க முடியாத இம் மூன்று குற்றங்களையும செய்த ஈ. வே. ரா. அவர்களின தலைமையில் 9-7-49 முதல் எனக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது.

— முடியரசன்

துரோகம்

இத்தனைநாள் கண்ணீர் பெருகியது. இப்பொழுது கண்டனம் வெளிப்படுகிறது. பெரியார் செய்தது தவறுமட்டுமல்ல, அவரைப் பின்பற்றிய லக்ஷக்கணக்கானவர்களுக்குத் துரோகமும் கூட.

டி. என். கோவிந்தராஜன்
திருச்சி

கலங்க வைத்தார்

திருமணம் என்று கேள்விப்பட்டுத் திடுக்கிட்டுப்போனேன். சாதித்திமிர் சாக்காடு நோக்கும் போது, மூடநம்பிக்கை முறிகிற போது, போட்டதிட்டங்கள் சட்டமாகும்போது, விதைத்த உணர்ச்சி விளைவு தரும்போது, பகையாளியும் நமதுபண்புக்குப் பலம் தரும்போது. கலக்கத்தை உண்டாக்கிப் பெரியார், இன்று பொருந்தாத்திருமணம் செய்துகொண்டார். ஈரோட்டில் மாநாட்டின்போது "அய்யா அய்யா" என்று கூறிவந்த அணங்கை, மகள் என்று இருந்தஎங்களுக்கு மகள் அல்ல மனைவி என்று அறைந்துகூறுவது போல் இருக்கிறது இன்றைய செயல்-எவருடைய துணையால் உற்றார் உறவினர் பகையையும் நண்பர்கள் பகையையும தேடிக்கொண்டோமோ, அவராலேயே தாக்கப்பட்டோம்.

ப. முத்து
துறையூர்

படை வீரர் எண்ணம்

இடு இணையற்ற 'பொன்னி' பொங்கல் மலர் படித்து மகிழ்ந்த நான்கு திங்களுக்குள் 'தவறு! தகாது! வேண்டாம்' என்ற தலையங்கத்தைப் பொன்னியில் படிக்க நேரிடும் என்று, நான் மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான பொன்னி


அன்பர்களில் ஒருவர் கூடத் தத்தம் உள்ளத்திலே அந்த எண்ணத்தின் நிழலாட விட்டிருக்கமாட்டார்கள். "கட்டிய கோட்டையிலிருந்து விரட்டப்படுகிறோம்" என்று தளபதியே கூறும் நிலை எவரும் எதிர்பாராத வண்ணம் வந்துவிட்டது. இந்த நாட்டின் இருளகற்றப் பாடுபட்ட தலைவர் பெரியாரின் பொருந்தாப் போக்கை ஒப்பவில்லை — கோட்டையை விட்டு வெளியேறவில்லை - அவருடைய இலட்சியக் கோட்டைக் குள்ளேயே குறுக்குச் சுவர் ஒன்று எழுப்பித் தளபதியின் தலைமையில் அணி வகுத்து நிற்கிறார்கள் என்பதை நமதருமைத் தலைவர் பெரியாருக்கும் திராவிடத்திருநாட்டினர்க்கும் வசைபாடும் — ஏசும், ஏமாளிகளுக்கும், படம் பிடித்துக் காட்டும் பெரும் பணியை மேற்கொண்டு பகுத்தறிவுப் பாசறைப் படைவீரர்களின் எண்ணத்தை வெளியிட வேண்டுகிறேன்.


— கடலூர், தியாகராசன்

கழகம் அவரேயல்ல

பிடிவாத குணத்திற்கு எடுத்துக்காட்டு பெரியாரின் திருமணம். அவர் தம் பொருந்தாத் திருமணத்தின் துணைகொண்டு கழகத்தையோ கழகக் குறிக்கோளையோ ஒரு சிலர் தூற்றுகின்றனர் - அது தவறு - தவறு. கழகம் அவரேயல்ல. நிந்திப்பவர் இதைச் சிந்திக்க வேண்டும். பெரியார் கழகத்திலிருந்து தம்மைவிலக்கிக்கொள்வதே அறிவுடைமை. இதைச் செய்யப் பெரியார் தயங்கார். தயங்கின், திராவிட மக்கள், மனமுடைந்திருக்கும் நம் கழகத் தோழர்கள், சீரிய முறையில் திரண்டெழுந்து அவர் தம் தலைமையை விலக்கி நேரிய முறையில் தொண்டுபுரிவதே சாலச் சிறந்தது. கொள்கையினின்று வழுவாதவன் திராவிடக் கழகத்தான் என்பதை ஒவ்வொரு தோழனும் நிலை நாட்ட வேண்டியது கடமையும் உரிமையுமாகும்.

— வாணிதாசன்





உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

வாழ்க்கையின் லட்சியம் என்ன? உங்களைக் கேட்டால் உல்லாசமாய் இருக்க வேண்டியது என்பீர்கள். ஆனால் என்னைப் பொருத்த வரையில், ஓயாமல் மோதுகின்ற அலைகளையெல்லாம் தாங்கிக்கொண்டிருக்கும் கடற்கரையைப்போலத் துன்பங்களையெல்லாம் சகித்துக்கொள்ளப் பழகுவதுதான் வாழ்க்கையின் லட்சியமோ என்று தோன்றுகிறது. ஏனெனில் என் வாழ்க்கையே ஒரு துன்பக் கேணி. தோல்விப் படலங்களைக் கொண்ட ஓர் தொடர்கதை.

ஒருநாள் இதைப்பற்றி உட்கார்ந்து நெடுநேரம் யோசிக்கத் தொடங்கினேன். கல்லூரியில் நான்படித்த புத்தகங்களையெல்லாம் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். சங்கநூல்களில் தாவினேன். திருக்குறளைத் தேடினேன். புராணங்களையும் புரட்டினேன். முடிவாக ஒன்று புலப்படலாயிற்று.

வாழ்க்கையின் லட்சியமாவது அறம் செய்தல், பொருள் ஈட்டல், இன்பம் அடைதல்—அதாவது, அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் கடந்து, இன்னொன்றுமிருப்பதாகக் கூறுகிறார்கள். அதுதான், வாழ்வின் குறிக்கோள் என்றும் குறிக்கிறார்கள். அதுதான் வீடு அல்லது மோட்சமாகும்.

அறஞ்செய்ய வேண்டுமானால், உள்ளத்திலே இரக்கம் மட்டுமல்ல, கைநிறையக் காசும் வேண்டும். ஆனால் என்னிடம் இரக்கம் மட்டும் ஏராளமாக இருந்தது. தப்பித்தவறிக் கையில் காலணாக் கிடைத்து, அதைத் தனது காய்ந்த வயிற்றைக் காட்டிக் கொண்டு, கையேந்திவரும் ஒரு கந்தனுக்குக் கொடுத்துவிட்டால், பக்கத்தில் வரும் என் நண்பருக்கு உடனே கோபம் வரும். ஏனெனில் எனக்குப் போட்டியாகத் தனது மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள அவரும் ஒரு காலணாவைத் தன் கையிலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறதல்லவா? அதனால்தான்! கந்தன் போனவுடன் நண்பர் தனது கண்டனத்தை ஆரம்பிப்பார்!

"பிச்சைக்காரர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்பார்.

"போன ஜன்மத்திலே புண்ணியம் செய்ய மறந்து போனவர்கள்"

"நான்சென்ஸ்! கிடையவே கிடையாது"

"பிறகு"

"அத்தனைபேரும் அயோக்கியர்கள், திருடர்கள், தடிராமன்கள்......"

"இன்னும்......"

"...சோம்பேறிகள், சோற்றுப் பிண்டங்கள்"

"அப்படியானால் காலணக் கொடுத்தது தப்பு என்கிறீர்கள்"

"தப்பு மட்டுமல்ல! பெரிய குற்றம். நாட்டின நாகரிகத்தை அரிக்கின்ற நச்சுப் பூச்சிகள் இவர்கள், சோம்பேறி வாழ்விலே சொகுசாகத்திரியும இவர்கள். சமுதாயத்தைச் சீரழிக்க வந்த சாக்கடைப் புழுக்கள்......"

"ஓகோ" என்று அவரோடு ஒத்து ஊதிவிட்டு, அவர் போனவுடன், ஓங்கி அரையாமல் விட்டு விட்டோமே என்று ஆத்திரம் வரும். ஆனாலும் கையிலே காசில்லாத போது, இந்தப் பிச்சைக்காரர்களையெல்லாம் பிடித்து, அந்தமானுக்கு அனுப்பிவிட்டால் என்ன என்று தோன்றும். ஆகவே, என் தந்தை உபதேசப்படி அறஞ்செய விரும்பினேன். ஆனால் திரவியம் தேடும் வழி தான தெரியவில்லை.

பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்றார் வள்ளுவர். என்னிடம் பொருள் இல்லாததால் இவ்வுலகில் இன்பத்தை அடைய முடியவில்லை. ஆகவே அருளைத் தேடியாவது 'அவ்வுலக'த்தில் ஒரு இடம் பிடித்துக் கொள்ளலாம் என்று கருதி, வேதாந்தத்தில் இறங்கி, வீடு (மோட்சம்) பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினேன். அப்போதுதான் ஆடிவீதி ஆனந்த நாதரை நான் பார்க்க நேர்ந்தது.

ஆடிவீதி-இதை ஆண்டிவீதி என்று அழைப்பது மிகவும பொருத்தமாயிருக்கும். தங்கள் காஷாயத்துணியைத் தரையிலே விரித்து, அதில் காலணு நாணயங்களைப் பரப்பி, கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டு நாகரிகமாய்ப் (!) பிச்சைவாங்கும் ஆண்டிகள் வரிசை வரிசையாக இருப்பர். "முருகா," "குகா," என்ற வார்த்தைகளை ஒவ்வொரு வாயும் முணுமுணுத்துக் கொண்டிருக்கும. உடம்பை வளைத்து உழைக்கத் தெரியாத உத்தமர்கள்! உண்ண ஒரு கவள அன்னம், உடுக்க ஒருமுழக் கோவணம், படுக்க, அடுக்குமாளிகை தேவையில்லை — குறுக்கும நெடுக்குமாக, வெட்டவெளியில் எட்டடிநிலம்—இதுதான் இவர்களது வாழ்க்கையின் லட்சியம்!

அடுத்துச்சென்றால், பாரதத்தைப் பாராயணம செய்து கொண்டிருக்கும் பக்தரைச் சுற்றிப் பத்துப்பேர் இருப்பர். அந்தப் பத்துப்பேர் கண்களும் பாட்டுக் கேட்க வந்த பாவையைக் கொத்திக் கொண்டே இருக்கும். பிறிதோர்புறம் ராமன் கதை நடைபெறும். சீதையின் அடிமுதல் முடிவரை உள்ள அங்கங்களின் அழகை அநுராகத்தோடு பாடுவார். அவரைச் சுற்றி அறுபது பேர்

அதை ஆமோதிப்பது போலத் தலையை ஆட்டுவார்கள். சிலர் மட்டுமே விழித்துக் கொண்டிருப்பார்கள்.

இடையிடையே செண்ட்ரல் பார்க்கில் விலையாகாத சுண்டல், மொச்சை வியாபாரம் நடக்கும். பக்தர்கள, அதைப் பார்த்துக்கொண்டே தின்ருல் புழுபூச்சிகளைக் கொன்றபாவம் தங்களைச் சேருமென்று கருதி, கண்களை மூடிக்கொண்டே கபளிகரம் செய்வர். உரித்த வாழைப்பழம், உடைத்த கடலைப் பருப்பு, வறுத்த பொறி கடலை, இப்படி—பக்தர்கள் பற்களுக்குச் சிரமமில்லாதவை களாக வியாபாரப் பொருள்கள் நடமாடும்.

இவர்கள் மட்டுமன்றி, ஆருடம் சொல்லும் ஆதிலிங்கச் சித்தர், சோசியர் சொக்கலிங்க பாதர், சக்கரக் குறிபார்க்கும் பக்கிரிராவுத்தர் ... எல்லோருக்கும் நாளங்காடியாக விளங்குவதும் ஆடிவீதிதான். இந்தக் கூட்டத்தில்தான் நானும் ஒருவகைத் திரிந்தேன், வேதாந்த விளக்கம் பெற!

ஒருநாள் மாலை, ஆடிவீதி கலகலப்பாய் இருநதது. அலங்காரப் பந்தலிட்டு அதிலே தோரணங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. மின்சாரவிளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டு, ஒலி பெருக்கிக் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. பக்தர்கள், இராக்காலத்தில், கூடுகளில் அடையப்போகும் பறவைக் கூட்டம் போல, வந்து கொண்டே இருந்தார்கள். அருந்ததிகளுக்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருந்தது. எனக்கு ஒரே திகைப்பு.

அப்பொழுது என் கூட்டாளி கூழுப்பண்டாரமும் நானும் கோவிலுக்குப் போய்விட்டு, ஆடிவீதியிலுள்ள எங்கள் ஆஸ்தான மண்டபத்திற்கு வந்து கொண்டிருந்தோம். என் திகைப்பைக் கண்ட நண்பர் விசேஷத்தை விளக்கினர்.

"ஆறுமுகப் பெருமானிடம் அளவிலாக் காதல் கொண்ட ஆனந்தநாதர் அன்று உபதேசம செய்யப் போகின்ருர். முருகக் கடவுள் அருளைப் பெற்றவர். ஐந்துகைக் கடவுளின் தம்பி ஆறுமுகத்தானின் பெருமைகளைப் பரப்பும் நோக்குடையவர். தமிழ் தெரிந்தசரசுவதியின் தயவைப் பெற்றவர். திருப்புகழைத் திருப்பி ஒப்பிப்பார். அத்தனை தேர்ச்சி. முற்றும் துறந்த பட்டினத்தார்; ஆசையை அடக்கிய சித்தார்த்தர், ஞானி" இவை என் நண்பர் வாயிலாக நான் கேட்டவை.

அவர் பேசுவதற்காகத் தனியாய் ஒருமேடை போடப்பட்டிருந்தது. மேடையில் அவர் தோன்றிஞர். ஆறுமுகக் கடவுளே (ஒருமுகத்தோடு) தோன்றிஞரென்று பக்தர்கள் ஆரவாரம் செய்தனர். செக்கச் சிவந்தமேனி. உருண்டையான முகம். பரந்த நெற்றி. விரிந்த மார்பு. பார்வையில் ஒரு வசிகரம்! கழுத்திலே உருத்திராட்சம். கையிலே தாளக்கட்டை—இவர்தான் ஆனந்தநாதர்—தனது திருவாயை அசைத்துத் திருப்புகழைப் பாடித் தனது திருக்காரியத்தைத் துவக்கினர்.

"மெய்யன்பர்களே!" என்ருர். வெள்ளியம்பலத்திலே மணியடித்தது போலக் குரல் கணீ

ரென்று வெளிவந்தது. என் மெய்சிலிர்த்தது. மேலும் அவர் பேசிக்கொண்டே போனார். கடவுள் இல்லை என்று கதறும் கசடர்களுக்குச் சரியான சவுக்கடி தந்தார், ஆறுமுக லட்சணங்களை அழகாக எடுத்துச் சொன்னார். அம்மையப்பனையும் மறந்தாரில்லை. அன்றைக்கு அவருடைய உபதேசம் என்னை அவருடைய உண்மை ஊழியனாக இருக்கும்படி தூண்டியது. என் ஆசையும நிறைவேறியது.

இப்பொழுது நான் அவருடைய பிரதம சிடன். அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்களில் மூத்தவன், அந்தரங்கக் காரியதரிசி போல. அடிக்கடி அவர் எனக்கு உபதேசம் செய்வார். நானும் அவ்வப்போது என் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வேன்.



“ஏண்டா மணி! பரீட்சையிலே பாசாகாமே இருந்தாப் பிணமாப் போயிடுவேன்னு சொன்னியே! இன்னமும் சாகாமே இருக்கியே!”

“சே! நிசப்பிணமில்லேடா! நடைப் பிணமாக இருக்கேன் இப்போ!”

பகவான் எங்கே இருக்கிறாரோ(?) அதைப்பற்றிக்கவலையில்லை. ஆனால் அவரை அடைவதற்குப் பக்தி என்ற வழிதான் (மார்க்கம்) சாலச் சிறந்தது என்று எனக்குப் போதிக்கப்பட்டது. அதிலிருந்து எனக்கே புரியாத கிரந்தங்களையெல்லாம் வாய்விட்டுப் புலம்ப வாரம்பித்தேன். அப்பொழுதே எனக்குப் பைத்தியக்காரன் என்ற பட்டம் சூட்டப்பட்டது

நெற்றியிலே திருநீறு பூசிக் கொண்டேன். பூசிக் கொண்டேனா? அப்பிக் கொண்டேன் என்று சொல்லுங்கள்! இதைப் பார்த்த என் கூட்டாளி கூழுப் பண்டாரம் சமையலறையில் வெள்ளை யடித்தது போல் என் முகம் இருந்ததாகக் கூறினாராம்.

“பாபி! பதிதன்! பஞ்சமன்” என்று என் வாயாரத் திட்டினேன. திருநீற்றின் மகிமையறியாத சிவத்துரோகி” என்று நிந்தித்தேன். என்ன இருந்தாலும், உமமைப் போன்ற உல்லாசங்கள் நெற்றியிலே திருநீறு பூசாமலும், கிரந்தங்களைப் புலம்பிக் கொண்டிராமலும், என் குருநாதருக்குக் காணிக்கை என்று (லஞ்சம என்பது கலிகாலத்தில் வழங்கும பெயர்) காசை வீசிப் பக்தர்கள என்ற பட்டத்தைப் பெற்ற பொழுது என் உள்ளம் வருந்தாமலில்லை.

ஒருநாள் இரவு எட்டு மணி. திருப்புகழைப் படித்துக் கொண்டிருந்தேன்.

"அருக்கு மங்கையர் மலரடி வருடி
கருத்த நிந்தமின் அரைதனில் உடை
[தனை
அவிழ்த்து ஆங்குள அரசிலை தடவி"

இங்கே, பாடல் தடைப்பட்டது. அரசிலை தடவி........... பொருள் விளங்கவில்லை எனக்கு. ஏட்டை எடுத்துக் கொண்டு மாடியிலுள்ள என் குருநாதரின் அறைக்குள் நுழைந்தேன், அங்கு நான் கண்ட காட்சி..................''

என் உடல் நடுங்கியது. உள்ளம பதறியது, கண் கூசியது. ஆனல், ஆனந்த நாதரோ புன் சிரிப்புச் சிரிக்க ஆரம்பித்தார். "பக்தா! பதருதே! பரம சிவனைப் பார்! அவரே தம் பக்கத்தில் பார்வதி தேவியுடன் காட்சி யளிக்கும்போது நாம் அவர் முன் எபமாத்திரம்? போ, உன் குருநாதரின் கொள்கைப் படி நீயும் நட'' என்ருர். திரும்பினேன். பக்கத்திலே நின்ற ஓர் பாவை அப்பொழுதுதான் என்னைப் பரிவுடன் தன் கரத்தால் பற்றினுள்.'பெண்ணுகிய மாயப் பிசாசம் வந்து' என்ற பாடல் எங்கிருந்தோ வந்து என் காதில் விழுந்தது.

அப்புறம் என்ன! சக்தியின் றேல் சிவமேது? ஆகவே சக்தி வாழ்கஎன்று கோஷமிட்டேன். சக்தி சொரூபங்கள(பெண்பக்தர்கள்)தாராளமாகத் தனியிட உபதேசத்திற்கு அனுமதிக்கப் பட்டனர். தேவிகளின் திருவருளை நாடி என் தேவனுக்குக் காணிக்கை கொண்டுவந்த உல்லாசங்கள் ஓராயிரம்!

குறிப்பறிந்து நடந்து கொள்வதிலே என் குருநாதர் கைதேர்ந்தவர். விரைவிலேயே அவருக்குச் சொந்தமாக ஒரு, 'முருகன் நிலையம்' முளைத்தது. கழுத்திலே உருத்திராட்சக் கொட்டைகள் தங்கக்கட்டியாக மாறின. தாளக்கட்டைக்கு வெள்ளிப்பிடி போடப்பட்டது. அவரது பவுன் நிற மேனியைப் பவுன்களாலேயே அலங்கரித்தனர் பக்தர்கள். அப்போதும் முருகன் பெயரை மறந்தாரில்லை.

இப்பொழுது ஆனந்த நாதர் புதுமனிதர். அவர் பொன்னை வெறுத்தார். ஆனுலும் பொன் அவரை வெறுககவில்லை. பெண்களை வெறுத்தார். பெண்கள் அவரை வெறுக்கவில்லை. மண்ணுசையை வெறுத்தார். ஆனுலும் மாடமாளிகையை அவர் வெறுக்க வில்லை.

சொத்துக்கள் அவரது சொந்த மனைவியின் பெயரால் வாங்கப்பட்டன. பாங்கியிலே பணம் குவிந்தது. அவரது மூத்த மகன் பெயரில் உல்லாசங்கள் ஊர்வசிகளை விரும்பி அவரிடம் உபதேசங் கேட்டனர். அதிகாரிகள் அவரின் ஆள்காட்டி விரலுக்கு அடங்கினர். ஆனுலும் இடையிடையே பாமரமக்களுக்குப் பரலோக சாம்ராஜ்ய வழிகாட்டியாக இருக்கவும் மறப்பதில்லை.

இந்தச் சமயத்தில் எனக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டுச் சிறைவாசமும் கிடைத்தது. காரணம்? ஆனறு ஜில்லா ஜட்ஜுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏந்திழையோடு நான் கொஞ்சிக் கொண்டிருந்ததுதான. கோர்ட்டிலே அடியார்கள் தந்த காணிக்கையை அபகரிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆறுமாதச் சிறைவாசமும் தரப்பட்டது.

விடுதலையாகி வெளியே வந்ததும் ஆனந்தநாதரைத் தேடிக்கொண்டு அலைந்தேன். ஆனுல் அவரைத்தேடிக்கண்டு பிடிக்கும் பொறுப்பைச் சர்க்காரே ஏற்றுக் கொண்டதாகக் கூழுப்பண்டாரம் கூறினுர். ஏனெனில் சுவாமிகள ஒருநாள் திடீரென்று அந்தர்த்தியானம் ஆகிவிட்டாராம்.

''வாழ்க்கை வாழ்வதற்கே'' இது இன்றைய சீர்திருத்தவாதிகளின் பேச்சு. ஆனுல் ஆனந்தநாதரைக் கேளுங்கள். அவர் குரல் வேறுபட்டிருக்கும் வாழ்வாவதுமாயம்மண்ணுவது திண்ணம், என்று பாடுவார். பிறகுதொண்டையைச்சரிபடுத்திக் கொண்டு ஆரம்பிப்பார். ''ஏ! மூடாத்மாவே! நீ இருக்கிற இந்தவீடு உனக்குச் சொந்தமா? உன்மனேவி உனக்குச் சொந்தமா? உன் உடல் உனக்குச் சொந்தமா? எல்லாம் ஒருநாளேக்கு மண்ணோடு மண்ணுய் மக்கிப்போவது திண்ணம். அதற்குள்ளாக, ''ஹே பரமாத்மாவே! என்று முருகனே நினைத்து முறையிடுங்கள். அவன் அருள் உங்களுக்குக் கிடைக்கும்'' என்பதாக உபதேசிப்பார்.

ஆனந்தநாதர் கூறியது போல, வாழ்க்கை மாயமில்லை பொய், பித்தலாட்டம், சூது, வஞ்சகம், பொறுமை சூலமும நிறைந்த ஓர் சுமை. இந்த சுமையைத் தாங்கமுடியாத ஏழைமக்கள்தான் வாழ்வாவது மாயம என்ற வார்த்தைகளே நம்பிச் சமாதானமடைகின்றனர். அதுமட்டுமல்ல, ஆனந்தநாதர்போன்றவர்களே, அந்தச் சுமையை இறக்க வந்த ஆண்டவன் என்றே கருதுகின்றனர். இப்படிப்பட்டகபோதித்தன்மையைத்தான் ஆனந்த நாதர்கள நன்கு பயன்படுத்திக் கொண்டு, கண்ணுக்குத் தெரிகிற இந்த உடலைக்கூட, 'காயமே இது பொய்யடா' என்று கூறி ஏமாற்றுகின்றனர்.

ஆனுல், உல்லாசங்களுக்கு வாழ்க்கை மாயமில்லை. அது அவர்களுக்கு ஆனந்தபுரி, தேனிலே துவைத்தெடுத்த பலாச்சுளே, பாலிலே செய்த பாயசம்.

இதுதான் உண்மை. ஏழை மக்கள் உழைப்பின் பயனே, உல்லாசங்கள் பறிப்பதோடல்லாமல், ஆனந்தநாதர்களும் அனுபவிக்கின்றனர். ஆனுல் உழைப்பவன் ரத்தக் கண்ணீர் வடிக்கின்ருன். இந்நிலை என்று மாறுவது? ஒடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி, ஒப்பப்பர் ஆவது என்றைக்கு?

வணக்கம்
வழிப்போக்கன்

தெலுங்கு இலக்கியம்

—அறிஞர் கா. அப்பாத்துரை—

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

செயற்கைக் காவியம் அல்லது பிரபந்த காலம்

(16—17ம் நூற்றுண்டுகள்)

தெலுங்கு மொழிக்கு ஆதரவளித்த பேரரசர் விஜயநகரத்தரசர்மட்டுமே, தமிழ், கன்னடம், வடமொழி ஆகியவை பொதுவாகவும் தெலுங்கு சிறப்பாகவும் அவர்களால் வளம் பெற்றது. இரண்டாம் கிருஷ்ண தேவராயர் தெலுங்குப் புலவருக்கு பேராதரவு தந்ததுடன் தானே தெலுங்கிலும் வடமொழியிலும் புலவராயிருந்து காவியங்களியற்றினர். அவர் இயற்றிய 'அமுக்த மால்யத' அல்லது 'விஷ்ணுசித்தியம்' புதிய பிரபந்த காவியங்களுக்கு வழிகாட்டியாய் அமைந்தது. அதன் கதை தமிழ் ஆழ்வார்களுள் விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார் மகளான நாச்சியார் கண்ணனை விரும்பி மணந்துகொண்ட கதையேயாகும். இது நீண்ட தொடர்களும் வர்ணனையும் நிறைந்ததாயினும் ஓசையினிமையும் வீறும் உடையது.

கிருஷ்ண தேவராயர் பேரவையில் அஷ்ட திக்கஜங்கள் (எட்டுத் திசை யானைகள்) என்ற எட்டுப் பெரும் புலவர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் அல்லசானி பெத்தண்ணர், நந்தி திம்மண்ணர், அய்யலராஜு ராமபத்திரய்யா, தூர்ஜடி, மாதியகாரி, மல்லண்ணர், பிங்களி சூரண்ணு, ராமராஜ பூஷணர், தெனுலி ராமகிருஷ்ணர் ஆகியவர்கள். இவர்களுள் இறுதிப் புலவர் மூவர் உண்மையில் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்குப் பின் வாழ்ந்தவர்கள்.

அல்லசானி பெத்தண்ணு விஜயநகர அரசர் அவைப் புலவராய்ப் பிரபந்த கவிஞர்களின் தலைவராயிருந்தார். அவர் இயற்றிய 'சர்வோச்சிஷ மனு சரித்திரம்' மார்க்கண்டேய புராணத்தின் ஒரு கதையை விரித்துரைப்பது. அணியழகில் இவர் ஸ்ரீநாதரையும்; வருணனையில் பினவீரபத்திரையாவையும் பின்பற்றினர். சொற்களைத் தொடுப்பதில் அவர் மிகவும் வல்லவர். கதை பலவாக விரிந்து உறுப்புக்கள் நன்கு கோக்கப்படாமல் இருப்பினும் கவிதை நயத்தால் அது வாசிப்போரை வசப்படுத்த வல்லது. நந்தி திம்மண்ணு இயற்றியது 'பாரிஜாதாபஹரணம்' ஒருநாள் அரசியின் கால் தன் தலைப்பக்கமிருந்தது கண்டு சீற்றமுற்ற அரசனை நயமாகச் சீற்றம் தணிப்பதற்காக இது எழுதப்பட்டதெனக்

கூறப்படுகிறது. கண்ணன் ஊடலிற் கோபமுற்ற சத்திய பாமாவின் உதையேற்றுக் காலைத் தடவி அது வருந் திற்று என இரங்கியதாக இதிற் கூறப்பட்டது. அய்யல ராஜு ராமபத்திர கவி வறுமையாலும் குசேலர் போன்ற பிள்ளைச் செல்வத் தாலும் வருந்தித் தற்செய லாய மற்றொரு புலவர் ஆத ரவு பெற்று அரசனையடைந்து அவன் வேண்டுகோளின்படி புராணக் கதைகளைத் திரட்டி 'சகல கதாசார சங்கிரகம்' இயற்றியதாக அறிகிறோம். காளத்தியைச் சார்ந்த சைவப் புலவர் தூர்ஜடி 'காளஹஸ்தி மாகாத்மியமும்' மாதியகாரி மல்லண 'ராஜசேகர சரித்திர மும்' இயற்றினர்.

கிருஷ்ண தேவராயருக்குப் பின் திகழ்ந்த புலவர்களுள் சங்குசலநிருசிம்ஹகவியும் பிங் கள சூரண்ணவும் பூஷணரும் முக்கியமானவர்கள். நிருசிம் ஹர் அல்லசாணியின் பொரு மையால் அரசனைச் சந்திக்க முடியாமல் தான் பாடிய 'கவிகர்ண ரஸாயன'த்தின் பாட்டுக்களை விற்றதாகவும், ஆயிரம் பொன் கொடுத்து ஒன்று வாங்கிய அரசன்மகள் அதனை ஒருநாள் பாடக்கேட்டு அரசன் தன் தவறுணர்ந்து வருந்தினதாகவும் கதைகூறப் படுகிறது. சூரண்ண தொடர் சிலேடையில் இராமாயணபார தம் இரண்டும் கூறும் 'ராகவ பாண்டவீயம்' புராணச் சார் பின்றிப் புதுக் கற்பனைக்கதை யாகிய 'கலா பூர்ணோதயம்' புராணக் கதையையே புதுவ தாகப் புனைந்த 'ப்ரபானதி—பிரத்யும்ன' ஆகிய சிறந்த காவியங்களை இயற்றினார். இவர் சிலேடையும் எமகமும் பெரு கக் கையாண்டவிடத்தும்கூட மொழி நடை எளிமையும் இயற்கை வனப்பும் உடை யதாயிருப்பது வியக்கத்தக் கது. பிரபந்தகால 'மரப்பாவை' இயக்கத்திடையே உண்மை யான உயிர்நடையைக் கைக் கொண்ட புலவர் இவரே. பூஷ ணர் தம் 'வாசு சரித்திர'த்தில் புதுக் கதையும் புனையாமல் புராணத்துக்கும் கட்டுப்படா மல்,புராணத்தின் சிறுநிகழ்ச்சி யொன்றைப் பெரிதும் மாற்றி யும் விரித்தும் காவியம் இயற் றினார். இது பாகவத புராணத் திலிருந்து எடுக்கப்பட்டது. இவரும் சிலேடையணி வழங் கினும் ஓசைக்காகப் பொருளை விட்டுக் கொடுத்ததில்லை. இவர் நடை சூரண்ணவின் எளி மையையும் ஒழுங்கையும்போல் அடையாவிட்டாலும் அதனை ஒத்தநயமும் இனிமையும்உடை யதே'ஹரிச்சந்திர, நளோபாக் கியானம்'என்ற இரு சிலேடை யுள்ள துலாதுவகாவியம் ஒன்று இவராலும இயற்றப் பட்டது.

தெனாலிராமகிருஷ்ணர் ஒரு விகடகவி யெனவே அவரைப் பற்றிய பல கதைகளும் கூறு கின்றன. வடமொழி சைவப் புலவரான அப்பைய தீக்ஷிதர் வைணவப் புலவரான தாத் தாச்சாரி ஆகியவர்கள் இவர் காலத்தவர். இவர் விகடமும் வசையும் தாத்தாச்சாரியைக் கண்டிக்கும் நோக்கமுடை யவை. இவர் சமயப் பற்றுடை யவராயினும் சமய வெறியை யும் சமய வேடத்தவரின் நய வஞ்சகத்தையும் வெறுத்தவர். வீர சைவராகிய இவர் லிங்க

புராணம் என்ற வீர சைவ புராணமும் பாண்டுரங்க மகாத்மியம் என்ற சிறந்த தலபுராண காவியமும் இயற்றினர். பாண்டுரங்க மகாத்மியம் தெலுங்கின் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருக மதிக்கப்படுகிறது.

நலிவுக் காலம்

17—19ம் நூற்ருண்டுகள்

1565-ம் ஆண்டு தலைக்கோட்டைப்போரில் விஜய நகரம் வீழ்ச்சியடைந்தபின் தெலுங்கிலக்கியத்துக்கு ஆதரவு குன்றிற்று. ஓரளவு மககளாதரவு பெற்ற மொழி பெயர்ப்புக்கால இலக்கிய ஊற்றும், அரசவை ஆதரவினுலேயே வாழ்வு பெற்ற பிரபந்த இலக்கிய ஊற்றும் இரண்டுமே வற்றிப் போயின. இலக்கணப் புலவர் அணியிலக்கணப் புலவர் ஆகியவர்களின் ஆதிக்கம் கற்பனைக்கு ஒரு தடைக் கல்லாய் அமைந்தது.

விஜய நகரத் தெலுங்கு மன்னரின கால் வழியினர் இக்காலத்தில் தஞ்சையிலும் மதுரையிலும் தன்னுண்மையுடன் ஆண்டனர். இக்காலத்தெலுங்கிலக்கியத்தின ஒரு பெரும் பகுதி தெலுங்ககத்துக்கு வெளியில் தமிழகத்திலேயே வளர்ச்சியடைந்தது.

இக்காலத்தில் தொடர் சிலேடையான துவந்துவ காவியங்களைப் பின்பற்றிச் சில நூல்கள் எழுதப்பட்டிருந்தன. நாடகங்களும் சிறுபான்மையாக ஒன்றிரண்டு இயற்றப்பட்டன. ஆனுல் இக் காலத்தில் குறிப்பிடத்தக்கதோர் இயக்கம் 'அச்சதெனுகு' அல்லது தூய தேசி நடை இயக்கம் ஆகும். ஒன்றிரண்டு பாட்டுக்கள் தூய தெலுங்கில் எழுதும வழக்கமும் தூய (சிதையாத) வடமொழிச் சொல் (தற்சமம்) நீக்கி எழுதுவதும் இதற்கு முன்னும் அருவழக்காயிருந்தது. ஆனுல் தூய வடசொல் மட்டுமின்றிச் சிதைந்த வடசொற்களையும் (தற்பவங்கள்) நீக்கி எழுத முயற்சி செய்யப்பட்டது இக்காலத்திலேயே. இவ்வகையில மிகச் சிரிய நூல் பொன்னிகண்டி தெலகனுர்யாவின் 'யயாதி சரித்திரம்' ஆகும். தெலுங்கு மொழியின் தலைசிறந்த காவியங்களுக்கொப்பாக அச்சதெனுகிலும் சிரிய காவியம் இயற்ற முடியும் என்று காட்டியவர் இவரே. இவரைப் பின்பற்றி அச்சதெனுகு காவியம் எழுதியவர் பலராயினும் இவரளவு அவர்கள் கவிதை வெற்றி பெறவில்லை.

அச்சதெனுகு இயக்கத்தின் தோல்விக்கான காரணம்பற்றி அறிஞர் செஞ்சையா அவர்கள் கூறுவதாவது: "இந்நூல்கள் ஏறக்குறைய ஒரு சோதனை முறையாகவும் புலவர் திறங்காட்டும் முயற்சியாகவுமே எழுதப்பட்டன. வளைய வளையக் கூறும் அவர் நடைகளை அவற்றிற்கான திறவுகோலின்றி எவரும் அறியமுடியாது. தமிழிலும் ஆங்கிலத்திலும் பிறமொழிச் சொற்களை விலக்கும் முயற்சி நாட்டுப் பற்றுக் காரணமாகவும் தூய தேசீய மொழிப்பற்றுக் காரணமாகவும் ஏற்பட்டது. தெலுங்கில் அங்ஙனமன்று. அது மக்களை மிரளவைக்கும்

ஒரு புலவர் கருவியாகமட்டுமே நின்றது"

சித்திரகவிச் செப்பிடுவித்தையில் உலகில் எவருமே போட்டியிடாத அளவு இக்காலத் தெலுங்கக் கவிஞர் சென்றனர். 'ப' வர்க்கம் (நான்கு 'ப'க்களும் 'ம'வும்) விலக்கியும் 'ப'வர்க்கம், 'உ'வர்க்கம் விலக்கியும் காவியங்கள் எழுதப்பட்டன. அரிச்சுவடியின கடைசி ஐந்து மெய்யெழுத்துக்களை மட்டும் கொண்ட 'ஸைலேசலீலா' என்ற காவியம் ஒரே மெய்யெழுத்தில் அமைந்த மற்றொரு காவியமும் கவிதைச் செப்பிடுவித்தையின் கொடுமுடியை எட்டுகின்றன.

தமிழகத்தின் தெலுங்கிலக்கியம்

தெலுங்கு நாட்டுக்குப்புறமே தெலுங்கிலக்கியம் மைசூரிலும் தஞ்சை, மதுரை, புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் வளர்ச்சியடைந்தன. இத்தென்புல இலக்கியத்தால் தெலுங்கு மொழி பெற்ற வளங்கள் உரைநடை இலக்கியம், இசையிலக்கியம், நாடக இலக்கியம், பொது அறிவுத் துறை ஆகிய நான்குமாகும். இவற்றுள் உரைநடை தென்புல இலக்கியத்துக்கு மட்டுமனறித் தெலுங்கிலக்கியத்துக்கே பெருமை தருவதாகும்.

தென்புல இலக்கியத்தில் ஒரு பெருங் குறையும் கூறப்படுகிறது. தமிழகத்திலும் தெலுங்கு நாட்டைப்போலவே இக் காலத்தில் கம்பர்கால (11-ம் நூற்றுண்டு) புராண இலக்கியமும் பிரபந்த இலக்கியமும் நலிவுற்று இருந்தன. சிற்றின்பச் சார்பான நூல்களில் பெருமக்கள் களித்தனர். தமிழில் இக்காலத்தில் கூளப்ப நாயக்கனகாதல், விறலிவிடு தூது ஆகிய ஆபாச நூல்கள் எழுந்ததுபோலவே தெலுங்கிலும் எழுந்தன. இவை தெலுங்கிலக்கியத்துக்கே ஒரு கறை எனக் கருதப்படுகின்றன.

மைசூரில் வீரராஜு என்ற மன்னரால் உரைநடைப் பாரதமும் நஞ்சராஜு என்ற அமைச்சரால் இலிங்க புராணமும் ஹாலாசிய மாகாத்மியமும் (திருவிளையாடற் புராணம்) எழுதப்பட்டன. தஞ்சையில் ஆண்ட ரகுநாதர் தாமே வால்மீகி சரித்திரம் என்ற உரைநடைக் காவியமும் சாமகூட வெங்கட கவி சாரங்கதரா, விஜய விலாசம் என்ற ஒப்பற்ற காவிய மணிகளும் இயற்றினர். இவை மூன்றும் தெலுங்கிலக்கியத்தில் முதல் இடம பெற்றவை ஆகும். சாமகூடரின் கவிதை நடைலேயே முன்னும் பின்னும் இல்லாப் புதுமையுடையதாகக் கருதப்பட்டதனுல், திராக்ஷா பாகம், கதலீபாகம். நாளிகேர பாகம்என்ற மூன்று நடைகளுக்கும் மேற்படச் 'சாமகூட பாகம்' என அது தனிப்பட அழைக்கப்பட்டது. அரசன் காதற் கிழத்தியாயிருந்த முத்துப்பழனி என்ற பொதுமகள் கூட ராதிகாஸ்வந்தம் என்ற அழகிய காவியம் இயற்றினுராம். புதுவைச் செல்வரும் வள்ளலுமான ஆனந்தரங்கம பிள்ளையின் ஆதரவில் கஸ்தூரி ரங்க கவி 'ரங்கர-சந்தமு' என்ற காவியம் எழுதினர்.

தெலுங்குலகுக்கும் இசையுலகுக்கும் தஞ்சை யளித்த

பெருஞ் செல்வம் தியாகராஜர் இசைப் பாடல்களேயாகும். இது தமிழகத்திலும் தெலுங்ககத்திலும் மட்டுமன்றித்தென் இந்தியாவெங்குமே பாடப்படும் பெருமையுடையது.

மதுரையில் மன்னர் சொக்கநாதரால் 'சிரங்க மாகாத்மியம்' என்ற உரைநடைக் காவியமும் கிருஷ்ணப்ப நாயகரால் உரைநடை 'ஜைமினி பாரத'மும் இயற்றப்பட்டன. பின்னது தெலுங்கு உரைநடையின் உச்சநிலையுடையது. சமயச் சார்பானவையும் சிற்றின்பச் சார்பானவையுமான பலநூல்கள் எழுந்தன. 'வேலகப்பூடி கிருஷ்ணகவி'யின் 'வேதாந்த சாரம்' சமய நூல்களிற் சிறந்தது.

புதுக்கோட்டையில் தெலுங்கின் முதல் அகரவரிசையாகிய ஆந்திர பாஷார்ணவமும் பில்ஹணீயமும் எழுதப்பட்டன.

தற்காலம் அல்லது மறுமலர்ச்சிக் காலம் 19—20ம் நூற்றுண்டுகள்

இலக்கியம் மக்கள் வாழ்விலிருந்து தொடர்பற்று இயற்கையூற்றை யிழந்து நான்கு நூற்றுண்டுகள் தடுமாறிய பிறகு, 1796ல் அச்சுச்சாலை ஏற்பட்ட பின் மேனுட்டு இலக்கியக் கருத்துக்களின் பயனுக மீண்டும் தளிர்த்துத் தழைக்க தொடங்கிற்று. தொடக்கத்தில் கல்வியும் ஆராய்ச்சியும் மொழித்துறை இலக்கியத் துறை விவாதங்களும் பின் புத்திலக்கியங்களும் தோன்றலாயின. பழ நூலாராய்ச்சியாளர் வழங்காது இழக்கப்பட்ட நூல்களைக் கூடியமட்டும தேடிக்கண்டெடுத்து வருகின்றனர்.

தற்காலத் தெலுங்கிலக்கியத்தின் தந்தை என மதிக்கப்படுபவர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு ஆவர். தற்கால இலக்கியத் துறைகளில் அவர் முன்னணியில் நிற்காத துறையே யில்லை என்னலாம். தெலுங்கிலக்கியத்துக்கு அவர் செய்த பணிகளுள் முதன்மையானது அவரால் திறம்பட ஆராய்ச்சியுடன் எழுதப்பட்ட தெலுங்குக் கவிஞர் வரலாறு (ஆந்திர கவுல சரித்ர) எனனும நூலேயாகும். பழங்கதைகளுடன் பயன தரும் பலசெய்திகளும் நிறைந்த இதுபோன்ற மற்றொரு நூல் குருஜட த ஸ்ரீ ராமமூர்த்தியின் 'கவிஜீவிதமுலு' என்பதாம். வங்கூரி அப்பாராவினுல் தெலுங்கிலக்கிய வரலாறு (ஆந்த்ரவாங்மயசரித்திரமும்) ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. இதே ஆசிரியரால் மக்கள் வழக்கிலுள்ள பாடல்களும் சதகங்களும்திரட்டப்பட்டுளளன. ஆர். சேஷகிரிராவ், கிடுகு ராமமூர்த்தி முதலிய அறிஞர் தமிழ் முதலியமொழிகளுடன் தெலுங்கை இணைந்தாராய்ந்து திராவிட ஒப்பியல்மொழியாராய்ச்சி செய்துள்ளனர். டாக்டர் ஸி ஆர். ரெட்டியின் 'கவிதத்வவிசாரமு' கவிதையில் பண்பு பற்றிய ஆராய்ச்சியாகும்.

பெயரளவில் தெலுங்கில் ஒன்றிரண்டு நாடகங்களும் தென்புல இலக்கியத்தில் பத்திருபது நாடகங்களும் இருந்தனவாயினும வடமொழி, ஆங்கில மொழிகளைப் போன்ற நாடகவளம் இக்காலத்திலேயே ஏற்பட்டு வருகிறது. பழைய புராண கதைகளின் சார்பில் 'சாகுந்தலம்', 'நரகாசுர விஜயம்' 'மல்லிகா மாருதம்', 'வேணி சம்ஹாரம்' 'விக்

கிரமோர்வசீயம்' முதலியவை கள் பல எழுதப்பட்டன. இத் துறையில் வேதம் வெங்கட ராய சாஸ்திரியின் நாடகங்க ளும் கிருஷ்ணமாச்சார்லுவின் 'சித்ர நளிய'மும் சிறப்புவாய்ந் தவை. வீரேசலிங்கம்பந்துலு லக்ஷ்மிநரசிம்மம் ஆகியவர்கள் சமூகச் சீர்திருத்தத்தில் முனைந்து சீர்திருத்த நாடகங் கள் எழுதியுள்ளனர். குருஜாத அப்பா ராவின் 'கன்யா சுல கம்' இவ்வகைப்பட்ட சிறந்த சமூக நாடகம்.

வரலாற்று நாடகங்களுள் கே. சீனிவாசராவின் பிரிதிவி ராஜன், விஜயநகர வீழ்ச்சி ஆகியவை சிறப்புவாய்ந்தவை. ராஷனுரா, பிரதாபருத்ரா ஆகியவையும் இத்திறத்தவை. ஷேக்ஸ்பியர் நாடகங்களை வீரேசலிங்கம் மொழி பெயர்த் துள்ளார்.

புனைகதைத்துறை (நாவல்) புத்தம் புதிது. பங்கிம் ரோ மெஷ் ஆகியவர்களின் வங்கப் புனைகதைகள் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன. ஆங்கிலப் புனைகதை (*Vicar of Wake-Field*) தழுவி வீரேசலிங்கம் எழு திய நூல் ராஜசேகர சரித் திரம் ஆகும்.

வசை நூல்களில் ஜக்ககவி யின் ராவண தொம்மீயமுவும் நகைச்சுவை நூல்களில் பன்னு கண்டி லக்ஷ்மி நரசிம்மத்தின் 'ஸாக்ஷி'யும் குறிப்பிடத் தக் கவை.

வீரேசலிங்கம் சின்னையாசூரி ஆகியவர் உரைநடை நூல் கள் தற்கால உரைநடைக்கு இலக்காகத் தக்கவை. லக்ஷ்மி நரசிம்மராவ், மாடபதி றெனு மருதராவ் அக்கிராஜு உமா காந்தர் முதலியோர் சிறுகதை எழுத்தாளர்கள்.

1933ல் பெர்ஹாம்பூரில் நிறு வப்பட்ட நவ்ய சாஹித்யபரி வுத், சாஹித்ய சமிதி ஆகிய இலக்கியக் கழகங்கள் இலக் கிய வளர்ச்சியில் முனைந்துள் ளன. புரோகதத்தூர் கவிஞர் ஆன கதியா ராம வெங்கட சேஷரின் சிவாஜி சரித்திரம் கூறும் 'சிவபாரத'மும் 'ராணா பிரதாபசிங் சரித்திர'க்கவிதை யில் புதுத்துறை வகுத்துள் ளன.

இக்காலப் புதியகவிதை இயக்கத்துக்கு ஆங்கில இலக் கியமும் வங்க இலக்கியமும் புறத்தூண்டுதலாயிருப்பினும், அது உண்மையில் நாட்டின் தேசியச் செல்வமான தேசி இலக்கியத்தைப் புதுப்பித்து வளப்படுத்தும் முறையிலேயே நாட்டம் செலுத்துகின்றதென் னலாம். இலக்கியத்திற்கான பொருளும் இப்போது பொது மக்கள் வாழ்வாய் வருகின றது. ராமி ரெட்டியின் 'கிரு ஷீவலுடு' உழவர் வாழ்வுபற் றிய பாடல். என். சுப்பாராவின் 'வெங்கிப் பாட்டுக்கள்' எளிய நடையிலும் எளியஉவமையணி களுடனும் இயற்கை வாழ் வைச் சித்திரிக்கின்றன.

பிறமொழிப் பண்பாடாகிய காடுகளில் நெடுங்காலம் திரிந் திளைத்த தெலுங்கு இலக்கிய நங்கை இப்போது தன்நாட்டு வாழ்வையே தாயகமாக்கி அறி வுலகின் முற்போக்கில் சரிசம இடங்கொண்டு பங்குகொள்ள முனைகின்றாள். ●



பரமானந்தர்

— நக. பாண்டுரங்கன் —

பரமானந்தர், பதினொரு மணிக்குப் படுக்கையில் ஒரு முறை புரண்டு படுத்தார். இரவில் அல்ல பகலில்! புரண்டு அப்படிப் படுத்தார் என்றால், என்ன பொருள் தெரியுமோ? முதல் நாள் இரவு அவரை அணைத்துக்கொண்ட 'நித்திராதேவி' கலகலவென வளையொலிக்க அவருடன் கைகுலுக்கி விட்டுச் செல்லும் கட்டத்தில் இருக்கிறாள் என்று அர்த்தம்.

பரமானந்தர் மறுமுறை படுக்கையில் புரண்டு படுத்தார். பதினொரு மணி — பகலவன் தன் அழகை யெல்லாம் பதுக்கிவைத்து விட்டு வெப்பத்தைக்கொட்ட ஆரம்பிக்கும வேளை. பாவம். காலைக் கதிரவனின் கண்கொள்ளாக்காட்சியைப் பரமானந்தர், நாளும் இழந்துவிடுகிறாரே என்கிறீர்களா? அவர் இழப்பது இருக்கட்டும், எத்தனைபேர், நம்மில் காலையில் எழுந்தாலும் கூடக் கதிரவனின் காட்சியைக் கண்டு களிக்கிறோம்; கண்டு களிக்க முடிகிறது? ………………பரமானந்தர் ஒரு முறை கண்ணை விழித்துப்பார்த்து விட்டு, மூடிக்கொண்டார். தூக்கம் கலைந்தபிறகு இமைகளால்கண்களை இழுத்து மூடிக்கொண்டு, அப்படிப் படுத்திருப்பதிலேதான் அடடா…!

''எஜமான்……''- வேலைககாரன் நடுங்கும் குரலில், பரமானந்தரின், படுக்கையின் வெகு தொலைவிலே நின்றுகொண்டே இப்படி உச்சரித்தான் — பயம் கலந்த பணிவுடன்!

''என்னடா…'' கண்களை மூடியபடியே படுக்கையில் இப்படியும் அப்படியுமாகப்புரண்டுகொண்டே, பரமானந்தர் பதிலளித்தார்.

''பிரஷ்ஷும்-பேஸ்ட்டும்--சோப்பும்-தண்ணியும் தயாரா இங்கே இருக்குங்க…கார்வாரி ஐயா கீழே வந்து அரைமணி நேரமாச்சுங்க— நிலத்தைப் பார்க்க நீங்க…'' வேலைக்காரன் விடுவிடு என்று கூறி முடித்தான். அப்படிக் கூறிவிட்டு, ஒரு வித திருப்தியும் அடைந்தான்.

''போடா!…தூக்கத்தைக் கலைக்காதே கழுதே! எல்லாம்எனக்குத் தெரியும்டா எருமே? ……ஞாபகப் படுத்தவா வந்துட்டே நாயே!…… இப்ப முடியாதுண்ணு சொல்லடா மடையா……''


காலையில்-அதாவது நடுப்பகலுக்கு அருகில்-பரமானந்தர் படுக்கையில் இருக்கும்போது, விஷயத்தைச் சொல்லும்போது, இப்படியெல்லாம் இடையிடையே, அர்ச்சனைகள் கிடைக்கும, வேலைக்காரனுக்கு! இன்று அப்படி ஒன்றும் இல்லை. சாந்தமாக இருந்துவிட்டார் எஜமான். கொண்டாட்டம் தானே வேலைக்காரனுக்கு.

பரமானந்தர் படுக்கையிலிருந்து எழுந்து, சிரமத்துடன் பல் துலக்கி முகம் கழுவி, எதிரே சுவரில் பதித்துள்ள கண்ணாடியில் முகத்தைப் பார்த்துத் தலை வாரிககொண்டு, வேலையாள் நீட்டிய விபூதி 'மடலிலிருந்து' விபூதியை எடுக்க விரலைக் கொண்டுபோக, அவன் பயந்துகொண்டே பணிவுடன் குனிந்து நீட்ட, இவர், இன்னும் விரல்களை இருந்தஇடத்திலிருந்துநீட்ட, அவன்

விரைவாக விபூதி மடலை முன்னே தள்ள, மடல் இருவர் கையிலிருந்தும் அவர் விபூதியை எடுக்க, கீழே விழுந்து, விபூதியெல்லாம் சிதற, "மடையா! மடையா!" என்று உச்சரித்துக்கொண்டே நாவில் கொஞ்சம் போட்டுக்கொண்டு, 'முருகா! முருகா!' என்று நினைத்துக்கொண்டு நாலு விரலால் நெற்றியில் நன்ருய்ப் பூசிக்கொண்டு, குழைத்து வைத்திருந்த சந்தனத்தை, ஒரு விரலால் தொட்டு, பொட்டிட்டுக்கொண்டு, உணவு அறைக்குள் புகுந்து, அரை மணி நேரத்திற்குப்பிறகு தாம்பூலம் குழையும் வாயுடன் வெளியே வந்து சோபாவில் சாய்ந்து, அப்படியும் இப்படியும் அசைந்து கால்மணி நேரத்தைப் போக்கிவிட்டு, 'தாயுமானவரை' அருகில் இழுக்க, கார்வாரி கனைக்கும் சத்தம் கேட்டு, 'தாயுமானவரைத்' தள்ளிவிட்டு, சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, சரிகை மேல்துண்டைச் சரிபாதியாக மடக்கிக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொண்டு, அதை ஒருமுறை இரு கரங்களாலும் தடவிவிட்டு, எழுந்து, புதுச் செருப்பை மாட்டிக்கொண்டு பூவேலை செய்த கைத்தடியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். கார்வாரி, குடையை விரித்துப் பரமானந்தர் தலைக்கு நேரே, பிடித்துக் கொள்ள, இருவரும் நடந்தனர், சூரியன் அவர்கள் தலைக்குநேரேநடந்து கொண்டிருந்தான்!

"கொஞ்சிக்கிட்டு இருக்கியா கொஞ்சிகஃட்டு! நேரம் ஓடுது. இப்படி நெளுவெடுத்துக் கிட்டே இருத்துட்டு, கூலிவாங்கிக் கிட்டுப் போயிடுவே, வேலைசெய்யாமல் ......கூலி குறையக்கூடாது – வேலைமட்டும் குறையலாம்! குஞ்சாயி, இனிமே இப்படி நெளுப்பறதா இருந்தா நாளையிலே இருந்து நின்றுடு...... கொஞ்சிக்கிட்டு இருக்கா குழந்தையோட, கொஞ்சிக்கிட்டு......"

களத்துமேட்டில். மரநிழலில் தன் இரண்டு வயதுக்குழந்தைக்குப்பால் கொடுத்துக்கொண்டிருந்தாள். குஞ்சாயி. அவள் வயலிலே நாற்றுநட்டுக்கொண்டிருக்கும் பல பெண்களில் ஒருத்தி! அவளைப் பார்த்தார் பரமானந்தர். மற்ற எல்லாரும்



வேலை செய்து கொண்டிருக்கும் போது அவள் மட்டும் வேலை செய்யாமல் நின்றுகொண்டிருக்கக்கண்டால், வேதனை பிறக்காதா படியளக்கும் பரமானந்தருக்கு? எனவே தான் பாய்ந்தார், மேற்சொன்ன படி. ஆண்டையின் கூக்குரலைக் கேட்டு, 'மார்பில்' புதைத்திருந்த மகனை வெளியே எடுத்து, களத்து மேட்டில் விட்டுவிட்டு, விடுவிடுவென இறங்கினாள் வயலில்!

"வேலையைப்பாரு பிள்ளே...... வேலையைப்பாரு. அப்புறம் கொழுந்தையைப் பார்க்கலாம்...... வேலையை முடி......"

கார்வாரி, இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார். பரமானந்தர் ஆரம்பித்த கூக்குரலை இன்னும் நிறுத்தவில்லை. களத்து மேட்டிலிருந்த குழந்தை 'அம்மா! அம்மா'! என்று கதறியது. அதன் கண்களிலிருந்து கண்ணீரும், வாயிலிருந்து பால்கலந்த உமிழ்நீரும் வழிந்து கொண்டிருந்தது. அம்மாவை நோக்கி அருமைச் சிறுவன் தளர் நடை போட்டு வந்தான் — கதறிக் கொண்டே! குஞ்சாயி, வயலில் குனிந்தவள் குழந்தையின் கதறலைக் கேட்டு நிமிர்ந்தாள். தாய் தன்னை நோக்குவது கண்டு, கதறலை இன்னும் உச்சஸ்தாயிக்குக் கொண்டு வந்து, நடையின் வேகத்தைக் குறைத்தது, குழந்தை. குழந்தையின் குரல் அவள் காதிலே புகுந்து இருதயத்திலே பாய்ந்தது! குழந்தையை ஓடோடித் தூக்கவேண்டுமென்று ஒவ்வொரு விநாடியும் அவள் மனதில் எழும் ஆசையை -ஆசையா? கடமையை, இல்லை, இயற்கையுணர்ச்சியை, பரமானந்தரின் அதிகாரக் குரல் அடித்து நொறுக்கிற்று. களத்து மேட்டில் கதறும் குழந்தை வயலில் நிற்கும் தாயின் மனத்தில் இருந்தது! வயலில் நிற்கும்தாய், களத்து மேட்டுக் குழந்தையின் நெஞ்சில் இருந்தாள்!

எஜமான்—பரமானந்தர்--எரிந்து விழுந்துகொண்டிருந்தார்!

தாய்-குஞ்சாயி-தன் குழந்தையிடம் பாய்ந்த பார்வையை, பரமானந்தர் மீது திருப்பினாள் கோபத்துடன்!

"ஆண்டே ஏன் இப்படி அனலை மேலே கொட்டுகிறீர்கள்? வேலை செய்யாமல் கூலிவாங்க வேண்டுமென்று, ஏய்த்துப் பிழைக்க வேண்டுமென்று நான் முயல்கிறேன்? ஏதோ குழந்தை பாவம்—காலையில் கஞ்சி குடித்தது. குடிசையிலிருந்து கிளம்பும்போது, அதன் தூக்கத்தைக் கலைத்து, அதன் வாயில் கஞ்சியை ஊற்றி, பிறகு

தூக்கி வந்தேன். களத்துமேட்டிலே படுக்கவைத்தேன். ஆமாய்! பூச்சி பொட்டு ஓடும் தரையில் என் புத்திரனைப் படுக்க வைத்தேன்! பஞ்சு மெத்தையாலான படுக்கையோ, தாதிகள் ஆட்டும் தொட்டிலோ அல்ல, தரை-அதில் படுக்கவைத்தேன்! கட்டிடத்திற்கு உள்ளே, மின்சாரவிசிறி வீசிடும் காற்றின் கீழே அல்ல, வெட்டவெளியிலே, பனி வாடை வீசும் தரையிலே போட்டேன் என் தங்கக் கட்டியை! தாயின் உடற் சூட்டிலே தூங்கவேண்டிய குழந்தையை, தரையின் ஈரத்திலே கிடத்தினேன்! வெடித்த தரைதான் அதற்கு வெல்வெட்டு மெத்தை; பறவைகளின் பாட்டுத்தான், தாலாட்டு; ஆடும் மரக்கிளைதான், மின் விசிறி ......இந்த நிலையில் இருத்திய என் குழந்தை, என்னைப்பார்த்துத்தூற்றவில்லை, தூங்கியது! நடுவே எழுந்து இங்குமங்கும் சிறிதுவிளையாடினான். அவன் விளையாட்டை நான் பார்த்துக்கொண்டே வேலை செய்தேன். ஆண்டே! எவ்வளவு சுலபத்தில் அப்போது வேலை முடிந்தது தெரியுமா? பிறகு விரித்திருந்த கந்தையில் படுத்தான்; மீண்டும் உறங்கிப்போனான். சூரியன் உச்சியை நெருங்கினான். குழந்தை கதறினான் — பதறி நான் ஓடி, பால் கொடுத்தேன். திடீரென்று நீங்கள் வந்தீர்கள். படபடவென்று பேசுகிறீர்கள். இது சரியா? பசியால் துடிக்கும் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூட அனுமதிக்காதா பண்ணேவேலை? முறையா இது? நீர் தரும் கூலி இவ்வளவிற்கும் எவ்வளவு? அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூட முழுதும் வரவில்லை! அதிகாரம் மட்டும் அண்டத்தைக் கிழிக்கும் அளவிற்கு இருக்கிறது அக்ரமமில்லையா, இது?......"

பரமானந்தரைக் கோபமுடன் பார்த்த குஞ்சாயி, இப்படிக்கேட்கவில்லை. கேட்கத் தெரியாததால் என்றுதானே எண்ணுகிறீர்கள். கேட்கத் தெரிந்தால்மட்டுமென்ன, கேட்கலாமோ அவள், அவரைப் பார்த்து?......

இந்தச் சமயத்தில், தான் வேலையில் மிகுந்த கவனத்தைக் கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தார் கார்வாரி. அந்த நினைப்பு, நாற்றங்காலில் உழுதுகொண்டிருந்த உலகப்பனைப் பார்த்து "ஏண்டா, உலகப்பா! உனக்கு முன்னே போகிறானே முனியன்-உன் அக்கா மகன்-ஏண்டா நேத்து மத்தியானம் வேலைக்கு வரல்லே?" என்ற கேள்வியாக எழுந்தது! இது கார்வாரிக்கு ஒரு கேள்வி; பரமானந்தரின் எரியும் நெருப்பில், இன்னொரு சேர் எண்ணெய்; முனியனுக்கு வெடிகுண்டு!

"முந்தாநாள் கூத்துப்பார்த்துட்டு விடிய வந்தாரு: கண்ணு சுத்துச்சு, காலே வேலே முடிஞ்சுது போனவன் ஆளைக் காணும்! ஆண்டே என் பேச்சை இவன் எப்ப மதிக்கலையோ, எப்படி உருப்படப் போறான்? " உலகப்பன் கூறினான், ஆண்டையின் கோபத்தைக் குறைக்க, முனியனை வைவதுபோல!

"கூத்துப் பார்க்கவா போயிருந்தாரு துரை? முனியனு...காலிக் கழுதை ..மத்தியானம் வேலைக்கு வரலையா அவன்? அப்படின்னு, காலே வேலையையும் எப்படி சரியா செய்திருப்பான்? ...தண்ட வேலை செய்றவனுக்கெல்லாம் தண்ணிபோல வாரிவிட்டாக் கூலியை,உருப்படாது குடித்தனம். ஒரு நாள் கூலியைப் பிடிச்சுடு கார்வாரி! அப்பத்தான், புத்தி வரும் இந்தக் கழுதைக்கெல்லாம் ...."

[அடுத்த இதழில் முடியும்]



லப்பதிகாரக் காட்சிகள்

~ விசு திருநாவுக்கரசு ~

12. விதி வகுத்த வழி!

கண்ணகியின் காற்சிலம்புடன ஆயர்பாடியை விட்டகன்ற கோவலன மதுரை நகரின் மணிமாட வீதிகளிலே சோர்ந்த உள்ளமும் தளர்ந்த நடையுமாய் நடந்து வருகிறான்.

சிலம்பை விற்று, பெற்ற பொருளால் வாணிபம்செய்து, இழந்தபொருளை ஈட்டநினைத்த எண்ணம் திட்பமாயிருந்து அவன் செயல்களிலெல்லாம் நுட்பமாய் வெளிப்படுகிறது. என்ன துன்பம் வரினும், எது தடையாயினும் கொண்ட உறுதியினும் மாறாத நோக்கம கோவலனைப் பிடர் பிடித்து அழைத்துவர நாம் காணுகிறோம். இல்லையானால் இத்தகைய துன்பத்திற்கு ஆட்படாமல் சுலபத்தில் தன் நாட்டிற்குத் திரும்பித் தன்னை மன்னிக்கத் தயாராய் இருக்கும் தாயையும் தந்தையையும் மகிழ்வித்து மனைவியுடன் தானும் மகிழ்ந்திருக்கலாமல்லவா! அந்த எண்ணம் அவனுக்கு முற்றிலும் இல்லை என்பதைக் கவி நனகு காட்டுகிறார்.

கண்ணாற்கண்டதைக்கையால் ஆக்கவல்ல கம்மாளர் நூறு பேர் தன்னைப் புடை சூழச் சட்டை அணிந்து, கோல் கைக் கொண்ட தலைமைப் பொற்கொல்லன் அதோ வந்து கொண்டிருக்கிறான். வழிவந்த கோவலன் தன் உள்ளத்திலே:

தென்னவன் பெயரொடு
சிறப்புப் பெற்ற
பொன்வினைக் கொல்லன்
இவனெனப் பொருந்திக்
காவலன் தேவிக்(கு)
ஆவதோர் காற்கணி
நீவிலை இடுதற்கு
ஆதியோ என

பாண்டியனிடம் வரிசை பெற்ற பொற்கொல்லன் இவனாதம் எனக்கருதினான் கோவலன். எனவே அவனருகு சென்று "அரசனது பெருந்தேவி அணியத் தகுதியான காற்சிலம்பு ஒன்று உளது. அதை உன்னால் மதிப்பிட இயலுமா?" என்று கேட்கிறான்.

இவ் வினவிற்கு விடைதரும் பொற்கொல்லனுடைய சொற் சாதுரியத்தைப பாருங்கள்!

அடியேன் மகளிரது கால ணியை விலை மதித்தற்கு அறி யேன். என்றாலும வேந்தர் முடி முதலிய அணிகளை ஆக்கு பவனாவேன்.

அடியேன் அறியே
னாயினும் வேந்தர்
முடிமுதற் கலங்கள்
சமைப்பேன் யானெனக்
கூற்றத் தூதன்
கைதொழுது ஏத்த

கைகுவித்துப் பணிவுகாட்டு கிறான்.

மாயமானாக மாரீசன் வடிவ மெடுத்துவந்ததுபோல எமன் வஞ்சகப் பொற் கொல்லன் வடிவிலே கோவலன் உயிரைக் கொண்டுபோக வந்ததாய்க் கவி எண்ணுகிறார். ஆனால் கோவலனோ கும்பிடப்பான தெய்வம் குறுக்கே வந்ததாய் எண்ணி 'அரசமா தேவி அணி யத்தக்க சிலம்பை நீ மதிப்பிட வல்லையோ' என வினவுகிறான். இவ் வினவிலே சிலம்பின் உயர்வில், பெரு விலையில் கோவலன் கொண்டுள்ள எண் ணத்தின் அளவுக்கு ஆசிரியர் நம உள்ளத்தையும் கொண்டு போகிறார்; இது வியப்பல்ல. சிலம்பு என்பது காலில் அணியு மொரு சாதாரணமான அணி கலனாகும். அது அரசமா தேவி அணியத்தக்கதாய், விலைகொடுத்து வாங்கவல்ல தாய், இருக்கிறது என்றால் கண்ணகியின் மற்றைய அணி கள் நம மதிப்பிற்குள் அகப் படாத வியப்பிற்கு உரியதா கின்றன அல்லவா? இவ் வியப்பைப் பலமடங்கு பெருக் கத்தக்க அளவிலே பிறிதொரு நிகழ்ச்சியின் மூலம் ஆசிரியர் காட்ட இருப்பதைப் பின்னே காண்போம.

கோவலன் தன் சிலம்பின் உயர்விலே, விலை மதிப்பிலே கொண்ட எண்ணத்தின் அள விற்கு, பொற்கொல்லன் தன் திறமையிலே கொண்டுள்ள நம்பிக்கையைத்தான் நாம் ஒப்பிட முடியும். இல்லையா னால் பொற்கொல்லன் 'மகளிர் அடிகளில் அணியும் ஆப ரணத்தை மதிப்பிட அறியேன். வேந்தர் சூடும முடிமுதற்கலங் கள் ஆக்க அறிவேன்' என்று பேசுவானா? அடியின் இழி வையும் முடியின் உயர்வையும் ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம் தன்னையே ஒருபடி உச்சிக்கு உயர்த்திக் கொள்ளுகிறான். கோவலன் உள்ளத்திலே நம் பிக்கையை நன்றாக விதைத்து விடுகிறான். கோவலன் எதிர் பார்ப்பதைத் தான் எளிதாக் கித் தருவதாய் நடிக்கிறான்.

கூற்றத்தூதன் கைதொ ழுது வணங்கினான் என்றவுட னேயே இனி யாதாகுமோ என்ற எண்ணம் புதிய வாசகர் களிடையே புயல் எழுப்பிவரு கிறது.

சிறிதும் ஐயப்படாத கோவ லன் சிலம்பை எடுத்துக்காட்டு கிறான். பசும் பொன்னிலே மணியும், வயிரமும் வைத்து இழைக்கப்பட்டுக் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரு கிறது. சிற்பநயங்களும், சித் திர நலங்களும் போட்டியிட் டுக் காட்சிதருகின்றன.

போற்றரும் சிலம்பின்
பொதிவாய் அவிழ்த்தனன்
மத்தக மணியொடு
வயிரம் கட்டிய

பத்திக் கேவணப்
பசும்பொற் குடைச்சூல்
சித்திரச் சிலம்பின்
செய்வினை யெல்லாம்
பொய்த் தொழிற்கொல்லன்
புரிந்துடன் நோக்கி

சித்திரச் சிலம்பின வேலைப் பாடுகளைக் கண்டு வியப்பவன் போல விலைமதிப்பதாய்ப் பாவனைகாட்டிக்கோவலன்மீது எவ்வாறு பழி சுமத்தலாம என எண்ணமிடுகிறான் பொற் கொல்லன். தட்டான சிலம் பைத் தட்டிக்கொண்டுபோகத் திட்டமிடுகிறான். கோவலனை நோக்கி:

கோப்பெருந் தேவிக்
கல்லதை இச்சிலம்பு
யாப்புற வில்லை
எனமுன் போந்து
விறல்மிகு வேந்தர்க்கு
விளம்பியான் வரவென்
சிறுகுடில் அங்கண்
இருமின் நீர்

இச்சிலம்பின் தகுதியைப் பார்த்தால் அரசமாதேவியே அணியத்தக்கதாய் உள்ளது. எனவே அரசரிடம் சென்று யான் திரும்பி வருமளவும் எனது இச்சிறு குடிலின் அருகே இருங்கள் என்று கூறிச் செல்லுகிறான். செல்லு கின்ற வஞ்சகப் பொற்கொல் லன் தன் சிந்தையிலே இவ் வாறு எண்ணுகிறான்.

கரந்து யான்கொண்ட
காலணி ஈங்குப்
பரந்து வெளிப்படா
முன்னம் மன்னற்குப்
புலம்பெயர் புதுவனில்
போக்குவன் யான்

வஞ்சனையால் கவர்ந்து கொண்ட சிலம்பு என்னிடமே உள்ளது என்பது வெளிப்படு முன்பே ஊருக்குப் புதிய வேற்றுநாட்டவனாகிய இவன் மூலமாய் என் கள்ளச்செயலை மறைப்பேன் என்று துணிந்த உள்ளமும் கள்ளமுமாய் அரண் மனையின உள்ளே புகுந்தான்.

இங்கே அவனது துணிச்சலைக் கண்டு நாம் வியக்கவேண் டியதில்லை. முடிபுனைந்து கோலோச்சும் பாண்டியனின் சிலம்பையே காரணமகப்படா முன்னமேயே கவர்ந்துகொள்ள நினைத்த துணிவிலே ஆயிரத் தில் ஒன்றாகுமா கோவலன் மீது சுமத்த எண்ணிய பழி? நினைத்துப் பாருங்கள்.

யாரையும், எப்படியும் ஏமாற்றிவிடலாம் என்ற துணி விலே வளர்ந்த இவன் ஒரு நயவஞ்சகத் துரோகியாகவே இக்காவியத்தில் உலாவுகிறான. துரோகி என்று சொல்லுவ தைப் பார்க்கிலும் பசுத்தோல் போர்த்த புலி என்று சொல் லுவதே பொருந்தும். இவனு டைய துரோகச் செயலுக்கு ஒரு உதாரணம்காட்ட எண்ணி னால் இராவணனுக்குத் தம்பி யாக வந்த சுயகாரிய விபீஷ ணனைத்தான் சொல்ல முடி யும். தான் வஞ்சகமாய்க் கவர்ந்த பாண்டியனது சிலம்பை மறைத்துவிட அவன் முனனிலையிலேயே மாய்மாலம் செய்யத் திட்டமிடுகிறான். முடி வில் தான் வெட்டிய குழியிலே விழுந்துமடிகிறான். பாண்டிய னையும் விழப்பண்ணுகிறான். பாண்டியநாட்டின் தலைநக ரையே படுநாசத்திற்கு உள் ளாக்கிப் பாண்டிய மரபுக்கே மாறாத பழியை உண்டாக்கி விடுகிறான். இத்தகைய வஞ் சகத்தின் வடிவமான பொற் கொல்லன் அரண்மனையி னுள்ளே வந்துகொண்டிருக்கி

றுன். அப்பொழுது அத்தாணி மண்டபத்திலே, அரசன் முன்னிலையிலே நாடக மகளிர் ஆடலும்பாடலும் நிகழ்த்தினர். அக் கலையிலே அரசன் ஆர்வமாய்த் தன்னை மறந்தான். அவனது ஈடுபாடு அரசமாதேவிக்கு ஐயத்தை வளர்த்துவிட்டது. மன்னவன் உள்ளம் இம்மகளிர் வசப்பட்டது என எண்ணினாள். தலை நோக்காடு என்று காரணம் சொல்லி அரசனைவிட்டு மெல்ல அந்தப்புரத்திற்கு நகர்ந்தாள். காவலன் உள்ளத்திலே காமக் கனல் எழுந்தது. அவ்வெழுச்சியில் அருகிருந்த அமைச்சரையும் அறிவாற் சிறந்த சான்றோர்களையும் மறந்தான். அரசன் அந்தப்புரம் நாடி அதிவேகமாய் வந்துகொண்டிருக்கிறான்.

இதுதான் தக்க சமயம் என எண்ணிய வஞ்சகப் பொற்கொல்லன் வணங்கினான். நிலத்திலே விழுந்து எழுந்தான். மீண்டும் வணங்கினான்.

கன்ன மின்றியும்
கவைக்கோ லின்றியும்
துன்னிய மந்திரம்
துணையெனக் கொண்டு
வாயி லாளரை
மயக்கு துயிலுறுத்துக்
கோயில் சிலம்பு
கொண்ட கள்வன்
அல்லன் பேரூர்க்
காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடில்
அமர்ந்திருந் தோனே

"அரசே, கன்னக்கோலும் கவைக்கோலுமில்லாமல் மந்திரத்தின் துணையாலே வாயில் காப்போரை மயக்கிச் சிலம்பு கவர்ந்த கள்வன் என் சிறு குடிலிலே இருக்கின்றான்" என இவ்வாறு கனிவாகப் பணிமொழி பேசிக் காவலனை நொடிப்பொழுதில் நம்பவைத்துவிட்டான்.

வினைவிளை காலம்
ஆகலின் யாவதும்
சினையலர் வேம்பன்
தேரா னாகி
ஊர்காப் பாளரைக்
கூவி ஈங்குஎன்
தாழ்பூங் கோதை
தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன்
கைய தாகில்
கொன்றச் சிலம்பு
கொணர்க ஈங்கு

அரசனாணை இதோ பிறந்துவிட்டது! இதுகாறும் அஞ்சி அஞ்சிப் பேசிய இளங்கோ இனி அஞ்சிச் சொல்லவோ, உணர்வை அடக்கவோ முற்றிலுமுடியாதவாறு அரசன் ஆணை பிறந்துவிட்டது! மறைவாகப் பேசியதை மன்னனாணை வெளியாக்கிவிட்டது. 'ஊர்காப் பாளரைக்கூவி' என்றவுடனேயே இளங்கோவிற்குக் காரணம் நாடுவதில் எண்ணம் புகுந்துவிட்டது. முதிர்ந்த தீவினை முற்றிலும் வெளிபடும் காலம் வந்தது என்கிறார். அதனால் பாண்டியன் சிறிதும் ஆராயாது 'இவன் கூறிய கள்வன் கையிலே தேவியின் சிலம்புள தாயின் கொன்று அச்சிலம்பைக் கொண்டுவருக' என்று ஆணையிட்டான். 'கொல்ல, அச்சிலம்பைக் கொணர்க' என்று கூறவேண்டியவன், சொற்சோர்வு படுகிறான். அதன் விளைவால் 'கொன்று அச்சிலம்பு கொணர்க' என்று கூறுகிறான். என்ன கொடுமை!

சொல்லின்கண் சோர்வுபடுதலால் வருந் தீமைக்கு இந்நிகழ்ச்சி அரியதொரு எடுத்துக்காட்டாக முடிகிறது.

அரசனிடமிருந்து இத்தகைய ஆணை பிறத்தற்கு மற்ருெரு காரணமும் உண்டு. காதலியின் ஊடலைத் தவிர்க்கக் கள்வன் கவர்ந்துபோன சிலம்பு ஒரு காரணமாகும் என எண்ணிஞன். அதனுலே தான் அவன் ஆணையில் விரைவும் ஒரு வேகமுமிருக்க நாம் காணுகிருேம்.

இத்தகைய ஆணை பிறந்தவுடனேயே விரித்த வலையிலே மன்னன் விழுந்ததாய் எண்ணி மகிழ்ந்தான் பொற்கொல்லன்.

அரசன் ஆணைக்குத் தலை வணங்கிப் பணிவுகூறித் திரும்பினர் கொலையாளர்கள். இவர்களுடன் கோவலன் இருக்குமிடம் நோக்கிவந்த வஞ்சகப் பொற்கொல்லன் கோவலனை அணுகி 'இவர்கள் அரசனுணையால் சிலம்பு காண வந்தவர்கள். அதைக் காட்டுக.' என்று கூறினன். காட்டிய சிலம்பைக் கையிலே வாங்கிய பொற்கொல்லன் வேருகச் சென்று சிலம்பின் பெருமையை எல்லாம் கொலையாளர்களுக்கு எடுத்துச் சொல்லி இது அரசனது சிலம்புடன் ஒத்திருப்பதைக் காட்டி நம்பிக்கை வருமாறு முயன்ருன்.

இலக்கண முறைமையின்
இருந்தோன் ஈங்கிவன்
கொலைப்படு மகனலன்
என்று கூறும்
அருந்திறல் மாக்களை
அகம் நகைத்து

பொற்கொல்லன் என்ன முயன்றும் கொலை செய்தற்குரியவனைக் கோவலனை அக்கொலையாளர்களால் எண்ண முடியவில்லை. தான் விரித்த வலையிலே இவர்கள் தப்பிவிடுவதை எண்ணிய கொல்லன் மேலும் முயலுகிருன்.

நம்பிக்கை வரத்தக்க நிலையிலே கள்வர் இயல்புகளை எல்லாம் நயம்படக் கூறுகிருன். அஞ்சத்தக்க, அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சிகளை அள்ளிவிடுகிருன். பூனைபோலிருந்து புலியாகமாறும் கதைகளை எல்லாம்வைத்துக்கதைக்கிருன். சிறிது சிறிதாக அவர்கள் மனம் தன் பக்கம் நோக்கிச் சாய்வதை அறிந்தான். 'இக் கள்வனிடமுள்ள மாயமருந்திலே நீங்கள் மயங்கி மன்னனுணையை மறந்தால் அவனது கைவாள் உங்கள் குருதி குடிக்கும். என்ன சொல்லுகிறீர்கள்?' எனப்பயங்காட்டினன் வஞ்சகப் பொற்கொல்லன்.

அதை ஆமோதித்த ஒருவன் "ஆமாம். நானும் கள்வர் மாயத்தைக் கண்ணெதிரே கண்டவன். இவன் சொல்வது முற்றிலும் உண்மை" என்ருன். அதே சமயத்தில்:

கல்லாக் களிமகன்
ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன்

ஆம். அறிவற்ற மூடனெருவன் வாளை வீசினன். அவ்வீச்சிலே கோவலன் தலை வேறு, உடல் வேருய் விழுந்தது. அதே சமயத்தில் பாண்டியன் செங்கோல் வளைந்தது. அறமகள் 'ஓ' என்று அலறினள். நிலமகள் உடலிலே இரத்த வெள்ளம் பரவியது. மதுரை நகர் வீதிகளிலே சோக இருள் பரந்தது. தீவினை அதை மௌனமாய்க் கண்டு மகிழ்ந்தது.

இளங்கோவடிகள், பண்டை விளைவாகி வந்த வினையால் பாண்டியனின் வளையாத செங்கோல் வளைந்தது என்று சமாதானம் சொல்லுகிருர். ●

பாரதிதாசன் பரம்பரை

இடர் கடந்து வந்தேன்

மலையைக் கடக்கையிலே —மாபெரும்
மாருதம் தாக்கியதே!
நிலையைக் குலைத்தலைத்தே —உடம்பை
நிறுத்தாது தள்ளியதே!

இருள்நிறைந்த காடு —பாம்புகள்
எங்கும் வளைந்து நெளியும்.
வரும் வழியை யறியேன் —எனினும்
வந்திடும் சிந்தை கொண்டேன்.

கல்லு முள்ளுங் குத்தும் —ஆனால்
கால்கள் விரைந்து செல்லும்
சொல்லும் தரத்த தில்லை —துன்பம்
சோர்வு யான் கொண்டதில்லை.

சாரல் மழை பெய்தது —என்னுடல்
தாங்கி மீதேறி வந்தேன்
சோர்வு களைப் பென்பதை —என்னுளம்
தூர விரட்டியதே!

என்னில் இடர் எதிர்த்துக் —குமரிநான்
ஏங்கிக் காத்திருந்தேன்!
எண்ணம் திரிந்தனையோ? —துயர்அற
இன்பமுகம் காட்டுவையோ?

தோழர் சுப்பு-ஆறுமுகம் தச்சநல்லூர் அருகில் உள்ள சத்திரம் புதுக்குளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். ஊடற்குறி காட்டும் தலைவியை நோக்கி "உனக்காக எத்தனை இடர் கடந்து வந்தேன்" என்று கேட்டுத் தலைவன் அவளைத் தன்வயப் படுத்தும் காட்சியை இப்பாடலில் சித்தரிக்கிறார்

—ஆசிரியர்.





இருபத்திநான்காம் அத்தியாயம்

நாட்டிய ராணி இரஜினி!

தன் மாளிகையைச் சேர்ந்த இராஜினி ஆடைகளை யெல்லாம மாற்றிவிட்டு வேறொரு புது அலங்காரம செய்துவிட்டாள். இப்பொழுது அவள் புது வடிவெடுத்த மோகினி போலவே காட்சி தந்தாள்! அவள் பிறகு இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். அடிக்கடி மாடியிலிருந்து வீதியைப் பார்த்தாள்!

நிலவு சிரித்தது. அந்தச்சிரிப்பில் அந்த நீல மாளிகையும் தன் அழகைக்காட்டிக் கொண்டிருந்தது! 'நீளத் தாழ்வார ஓரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் குமரிநல்லாள்' என்று கவிதை யமைத்துக் கொண்டிருந்தன மாளிகையைச்சுற்றி மணம் வீசிக் கொண்டிருந்த செடிகளிலே கொட்டை விழி விழித்துக் கொண்டிருந்த மலர்கள், அவைகள் எழுதிய கவிதையைப் பண்ணமைத்துப் பாடிக் கொண்டிருந்த வண்டுகள் காணக் காட்சியாய், கேட்கக் கீதமாய் இருந்தன.

இவைகளிலே அவள் மனம் பதியவில்லை. அது கட்டுக் கடங்காமல் எங்கேயோ ஓடிக் கொண்டிருந்தது.

......அன்று திடீரென்று சோணிசந்த் வந்து நுழைந்தான். அவன் சொன்ன செய்திதான் அவள் மறந்திருந்த அவளது பழையநாள் வாழ்வைக் கிளறிவிட்டது! அவளின் வாழ்க்கை வரலாற்றில் சில பல ஏடுகளைப் புரட்டினால் ஒரு பெயர் தென்படும். அது அரங்கமாலா. அதுதான் அவளது உண்மைப் பெயர்!

அரங்கமாலா, இராஜினியாக மாறுவதற்குள் எவ்வளவோ பெரும புரட்சிகள்! ஆனால் அந்த தோப்புத்தான் இத்தனைக்கும் காரணம்! அரங்கமாலா தன்னந்தனியாக மணம் வீசிய ஒரு 'காட்டுரோஜா' அவள் ஒருநாள் ஸுராஜுவின் கரங்களில் சிக்கிவிட்

டாள்! மலரைக்கசக்கிப் பிழிந்து விட்டான்! அவளும முதலில் தயங்கிப் பிறகே இணங்கினாள்! தோப்பிலே சந்திப்பு வளர்ந்தது! அவர்கள் சந்திப்பைச் சந்திசிரிக்கவைக்க, அவள் வயிற்றிலே ஒரு வைரிவளர்ந்தான்!

மாலா மருண்டாள். அவளது மாரனோ மனங் கலங்கவில்லை. தன் 'வீங்கிய' வயிறைக் காட்டிக் கெஞ்சினாள்! அவன் 'வெட்டிப் பேச்சால்' தட்டிக்கழித்தான்.

எல்லோரும் அறிய மணந்து கொள்ள வேண்டுமென்று வேண்டினாள். அவன் மறுத்தான். இல்லாவிட்டால் அந்தப்புரத்தில் அவனது ஆசைநாயகியென்றாவது அனுமதி தந்து விடுமாறு கேட்டாள். அவனோ தனது தாதாவின் கோபப்பார்வையைத் துணைக்கிழுத்தான்.

மாலா மனமுடைந்தாள். வங்கத்தை விட்டு ஓடத்திர்மானித்தாள். அவளின் 'அவசர சேர்க்கை'யால்கிடைத்த 'அறுவடை'யைக் கங்கையிலே விட்டெறிந்தாள்! பிறகு ஓடினாள், டில்லியில் நாட்டியராணி இரஜினியானாள்!

இந்தத் துயரக் கதையை நினைவூட்டி விட்டது சோணி சந்த்தின் சேதி!

"இரஜி இன்று வங்கத்திலிருந்து ஸுராஜ், சுபேதாரின பேரன் வந்திருக்கிறான். அவனை எப்படியும் மயக்கி இங்கே தங்க வைத்துவிடு! பிறகு வங்கம் நம் கைவசம்"

ஸுராஜ் இந்தப்பெயரைக் கேட்டவுடன் நெருப்பை மிதித்து விட்டது போலத் துடித்து விட்டாள். அவள் எப்படியும் அவனைப் பழிக்குப் பழிவாங்கிவிடுவது என்ற முடிவோடு ஒரு பெருமூச்செறிந்தாள். மேலும் அவள் அமீன் சந்த்தின் 'ஜ்ராம சந்த்' கூட்டத்தைச் சேர்ந்தவள்! அவள் வீட்டில்தான் திருட்டுச் சாமான்கள் பல பதுக்கி வைக்கப்படும். பல கள்ள வியாபாரத் தலைவர்கள் தங்குவார்கள். ஆகவே, சோணிசந்த்தின் வார்த்தைகளை அவள் நிறைவேற்றுவதன் மூலம் தலைவனின் கட்டளையை மீறவில்லை என்ற திருப்தியும், பழிக்குப் பழிவாங்கிவிட்டதால் ஏற்படும அமைதியும் கிடைக்கும்!

"அவன இங்கு தங்கினால்...?"

"அலிவர்திகான் சாவான். மக்களிடையே கிளர்ச்சி பிறக்கும், புரட்சி வாடை வீசும். அப்பொழுது நம் தலைவர் தக்கதோர் ஆளைத் தலைமையாக்குவார். முடி அவன் தலையில், பிடிமட்டும் நமது தலைவர் கையில்!"

"அப்படியானால் இவனுக்கு முடி கிடைக்காதே"

"நிச்சயமாகக் கிடைக்காது!"

இரஜினி யோசித்தாள். பிறகு ஒரு பெரிய திட்டம் போட்டாள். தானே ஆடுவதாகப் பாதுஷாவின் அனுமதி கோரினாள். அன்று தனது திறமையத்தனையுங் காட்டி ஆடினாள். அத்துடனல்லாமல் சோணிசந்த்தையும் அவனை எப்படியும் அழைத்து வரும்படி அனுப்பி விட்டாள். அதனால் தான் பாதைமேல் பார்வையைப் பாய்ச்சி நின்றாள்!

மணியாகவாக அவளது மனம் வாடியது, எண்ணம் எங்கெங்கோ ஓடியது!

ஆனால்...?

வங்கத்தின் சுபேதராகப் போகும் ஸுராஜுவும், சூழ்ச்சிக் குழுவின் ஒற்றன் சோணி சந்தும் வந்து கொண்டிருந்தனர். மாடியிலிருந்து இந்தக் காட்சியைப்பார்த்த அவள் மகிழ்ச்சி மிகுதியால் நாட்டியமே ஆடினாள்! உள்ளே ஓடினாள். படுக்கையிலே மலர்களைத் தூவினாள். பன்னீரைத் தெளித்தாள். பால் செம்பில், கற்கண்டுப் பொடியைததூவினாள். கண்ணாடியருகே சென்று அலங்காரங்களைச் சரிபார்த்தாள்! ஆடைகளைத் திருத்திக் கொண்டாள். வாயிற்படிக்கு ஓடினாள் அவர்களை வரவேற்க!

ஸுராஜ் நுழைந்தான், அவள் சிரிப்பால் வரவேற்றாள்! சோணி நழுவி விட்டான். இனி அவனுக்கு அங்கென்ன வேலை? பிறகு இருவரும் மாடிக்குச் சென்றனர்.

ஸுராஜ் பேச்சை ஆரம்பித்தான்.

"இரஜினி, நீ மிகவும் அழகி!"

"வங்கமண் அப்படி வளர்த்து விட்டது"

"என்ன, நீ வங்கத்தில் பிறந்தவளா?"

"அதனால்தான் வங்க சுபேதாரை வலுவில் அழைத்தேன்!"

ஸுராஜ் கட்டிலிலே அமர்ந்தான. அவள்மட்டும் நின்று கொண்டிருந்தாள்!

"உன் கால்கள் கடுக்குமே!"

'ஆட்டக்காரிக்கு அந்த நோய் கூடாது!"

இரஜினி சிரித்தாள். ஸுராஜுவின் விலா எலும்புகள் நோக ஆரம்பித்து விட்டன.

"ஒரு ஆட்டம் நான் பார்க்கலாமா?"

"ஒன்றென்ன ஓராயிரம் முறை ஆடுவேன உங்களுக்காக!"

நாட்டியராணி அப்படிக் கூறிக் கொண்டே ஆடத் தொடங்கிவிட்டாள். ஆட்டமா அது. ஒவ்வொரு எடுப்பிலும், பிடிப்பிலும் கலைபேசிக் கொண்டிருந்தது! கலையை அனுபவிக்கிற அளவு ஸுராஜுவை அந்த இடம் விட்டு வைக்கவில்லை. பட்டு விரிக்கப்பட்ட பஞ்சணை, உணர்ச்சியைக் கிண்டும படங்கள், காமத்தைப் பெருக்கும் நிர்வாணச்சிலைகள...அவனைச் சித்திரவதைச் செய்யத் தொடங்கிவிட்டன!

"இரஜினி, நீ களைத்து விட்டாய்!" என்றான் அவன்.

அதற்குள் பாலைத் தன் கையிலேந்தி அவள் அருகிலே வந்தாள்.

"எனக்கு இந்தப்பால் வேண்டாம்"

"பின்......"

"..........."

"சுத்தக் குறும்பு"

இரஜினி அவனது கன்னத்தைக்கிள்ளினாள். கன்னத்தையா கிள்ளினாள். அவன உள்ளத்தைக் கிள்ளி உணர்ச்சியை அள்ளிவிட்டாள்!

அன்று இரவு விடிகவில்லை. பஞ்சணைக்கும் உடம்பு வலி அதிகமாகி விட்டது! திடீரென்று முடீன் குரல் கேட்டபொழுதுதான் அவன் விழித்துக்கொண்டான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

நள்ளிரவில்!

முடீன்கான் தன்னந் தனியனாக அந்தப் பெரும் மாளிகையிலே உலவினான். பிறகு தன்படுக்கையிலே படுத்துக் கொண்டான். அன்று ஸுராஜ் நடந்து கொண்டது கொஞ்சமும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சோணி ஒரு பெரிய வஞ்சகக்காரன் என்று அவனுக்குப் பட்டது? முடீனுக்கு அவனுடன் ஸுராஜுவை அனுப்பப்பிரியமில்லை. அவனே பிடிவாதமாகப் போய்த்தானாக வேண்டும் என்று கூறிவிட்டான். முடீன் அவன் முடிவின் குறுக்கே நிற்க முடியவில்லை! ஆகவே அனுப்பிவிட்டான். எனினும் அவன் மனம் மட்டும் அமைதியடையாது தவித்தது.

சுந்தரியொருத்தி விசிறினாள். அவளைப் பார்த்ததும் அவளைச் சைகை காட்டி விரட்டி விட்டான். அவன் மனம் தனிமையை நாடியது. அவன எதையோ இழந்து விட்டவன் போல ஏங்கிக் கொண்டிருந்தான். கடைசியில் தூக்கம அவனைத் தழுவியது!

நள்ளிரவில்......

முடீன் திடீரென்று விழித்துக் கொண்டான். யாரோ வருங் காலடியோசைகள் கேட்டன.

திடு, திப், தப், தொப்,......

காவற்காரனாக இருக்குமோ, பணிப் பெண்கள் இவ்வளவு சத்தம் வருகிற மாதிரியில் நடக்கவே மாட்டார்களே! பின் யாராக இருக்கலாம்! முடீன் கண்களை மூடியபடியே யோசித்தான். அதற்குள் காலடியோசைகள் அவன் அறைக்குள்ளாகவே கேட்டன. திடுக்கிட்டான். ஐயோ, அப்பொழுது பாதுஷா ஷா ஆலமே வந்தான்! முடீன் எழுந்து வணக்கந் தெரிவித்தான். அவன் முகத்தில் பயம் பரவியிருந்தது.

"ஸுராஜ் எங்கே?"

"........அவன் இங்குதான் படுத்திருந்தான்"

"காணோமே"

"இரவில் உலவச் செல்வதும் உண்டு"

"சரி, இதைப்படி"

பாதுஷா அந்தப் பழைய கடிதத்தை அவன கையில் கொடுத்தான். முடீன் அவசர அவசரமாக அதனைப் படித்தான். அவன் முகம் பயங்கரமாக மாறிவிட்டது! அவன் கண்கள் சிவந்தன, மீசை துடித்தது!

"இது சுத்தப் பொய், வடி கட்டின அயோக்கியத்தனம்"

"கொஞ்சமும் உண்மையில்லையா?"

"பாதுஷா அவர்களே, உங்களிடம் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். சுபேதார் அவர்கள் வெள்ளையரிடம் வெறுப்புக் காட்டுவதில்லை. ஆகவே அவரது உதவியில்லாமல் தங்கள் உதவி கொண்டு தாக்கலாம என்ற எண்ணத்துடன் வந்தோம். இந்தக் கடிதம் எழுதியவன் பரிதாபத்திற்குரியவன். இவன் மகள் அழகி. ஆகவே ஸுராஜ் அவள் இன்பத்தை

ஒருநாள் சூறையிட்டுவிட்டான். மேலும் இவன் முஸ்லீம் துவேஷி! ஆகவே பழிக்குப்பழி வாங்க இந்தப் பாதகச் செயலைச் செய்திருக்கிறான். அவனை வங்கம போய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன்''

''அப்படியானால்......?''

''வங்கத்தில் ஏதோ பெரிய சூழ்ச்சிக் குழு வேலை செய்கிறது என்று தெரிகிறது!''

''நீங்கள் உடனே வங்கம் செல்லுங்கள். ஆனால் இதை எழுதியவனை ஒன்றும் செய்து விடாதீர்கள். ஆனால் அவன நடவடிக்கைகளை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள்''

பாதுஷா விடைகொடுத்து விட்டுச் சென்றான். முடீன் தன் சாமான்களை எடுத்துக்கொண்டு தோட்டத்துப் பக்கம் சென்றான். அங்கு அவனது குதிரை அவனைக்கண்டு கனைத்தது. தன் குதிரையின் மீது ஏறிக்கொண்டு ஸுராஜுவின் குதிரையையும் ஒரு கையில் பிடித்துக் கொண்டு சோணி சொன்ன முகவரியுள்ள மாளிகையை நோக்கி நடந்தான்! அவன் குதிரை மெதுவாகச் சென்றாலும், அந்தக் குதிரையடிகள் நன்றாகக் கேட்டன. ஏனெனில் ஊரில் அவ்வளவு அமைதி. ஆம். அப்பொழுது நள்ளிரவு!

கடைசியாக இரஜினியின் நீலமாளிகை வந்தடைந்தான். குதிரையை விட்டிறங்கி உள்ளே நுழைந்தான். வெளிவாயிற் கதவு திறந்து கிடந்தது. முடீன் ஆச்சர்யத்தோடு உள்ளே நடந்தான். எங்கும் இருள் கவ்விக்கொண்டிருந்தது. ஆனால் இடையிடையே மங்கலான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. தாழ்வாரத்தைத் தாண்டியவுடன ஒரு அறையில் பேச்சுக்குரல் கேட்டது. எட்டிப் பார்த்தான். இரஜினிதான் அவ்வளவு மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தாள். எதிரில் சோணி உட்கார்ந்திருந்தான்.

அவள் தலையைத் தன் கைகளால் தாழ்த்தி அவன் காதுக்குள் எதையோ சொன்னாள்! சோணி பயந்து விட்டான்.

''இரஜினி அப்படிச் செய்யாதே!''

''என் விருப்பம்''

''தலைவரின் கட்டளை அதுவல்ல''

''என் பழங்கதை உனக்குத் தெரிந்தால் இப்படிப் பேச மாட்டாய்!''

''சரி, உன் எண்ணம்போல் செய்''

''ஜெ ராம் சந்த்''

இரஜினி எழுந்து வெளியில் வந்தாள். முடீன் ஒரு தூண் மறைவில் ஒளிந்து கொண்டான். அவள் கொஞ்சநேரம் அப்படியே நின்றாள். பிறகு தயங்கித் தயங்கி மாடிப்படிகளில் ஏறினாள். அவனும் அவளைத் தொடர்ந்தான். பிறகு அந்த அலங்காரமான பள்ளியறைக்குள் புகுந்தாள். அங்கு

கமழ்ந்த நறுமணம் வெளியிலும் வந்து விளையாடியது!

அங்கு ஸுராஜ் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். அவன நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். அவள் அருகே சென்று நின்றுள். பெருமூச்சு விட்டாள். பிறகு அவனது ஒளி வீசும் முகத்தைத் தன் மலர்க்கரங்களால் தடவினுள். அப்புறம் அவன் பக்கத்தில் படுத்துக்கொண்டாள். கொஞ்ச நேரம் அப்படியே அசையாது படுத்திருந்தாள். பிறகு அவன் பக்கமாகத் திரும்பினுள். அவன் உடலில் தன் கரங்களை வைத்தாள். அவன் உறக்கம் கெடவில்லை. பிறகு தன் கால்களால் அவன் கால்களைப் பின்னிக் கொண்டாள்! அப்பொழுதுதான் அவளை நெருங்கித் தழுவிக்கொண்டான். அதுவும் தூக்கத்தில் செய்த செயல் தான்! அவள் அவன் உதட்டில் தேனைத் தடவினுள் தன் குங்கும நிற இதழ்களால்! ஆனுல் அந்தக் கோலத்திலேயே ஒரு கரம் தன் இடுப்பிலே ஒளிந்திருந்த வாளை இழுத்துவிட்டது வெளியில்! அடுத்த கணத்தில் அது ஸுராஜுவின் உடலில் பாய்ந்திருக்கும், ஆனுல் முடீன் திடீரென்று உள்ளே நுழைந்தான்.

"அடி பாதகி, கொல்லவா நினைத்தாய்?"

என்று கூவினுன். நடுநடுங்கிப் போனுள் அவள். இந்தக் கலவரத்தில் ஸுராஜ் விழித்துக்கொண்டான். கீழே திக்திக்கென்று அடித்துக்கொண்ட நெஞ்சைத் தன் ஒருகையால் அழுத்திக் கொண்டிருந்த

சோணிசந்த் மெதுவாக ஏறி வந்தான் மாடிப்படிகளில்!

"கண்ணே, வாள் ஏது உனக்கு?"

"நான் தேடி எடுத்து வந்தேன்?"

"ஏன்?"

"உங்கள் உயிரையே குடித்து விட!"

"என்ன?..........."

இரஜினியின் பெண்மையும், அதற்கு இயல்பாக உரிய பயமும் பறந்துவிட்டன. அவள் ஆத்திரமாகவே வார்த்தைகளை வீசினாள்.

"ஆ, அரங்கமாலாவா?..."

ஸுராஜுவுக்கு ஆத்திரம் மறைந்து ஆச்சர்யம் பிறந்து விட்டது!

"மாலா! என்னை மன்னித்து விடு. இப்பொழுது என்னுடன் வந்துவிடு. கழிந்த காலத்தில் நான் செய்த பாவத்திற்கு இதனைக் கழுவாயாகக் கொள்ளுகிறேன்" என்று நெஞ்சு நெகிழக் கெஞ்சினான். அவள் அவனைக் கண்டபடி தாக்கினாள் காரமானவார்த்தைகளால்! அவனோ மண்டியிட்டான். மன்றாடினான்! முடினுக்கு ஒன்றும் விளங்கவில்லை-ஒருவேளை குடிமயக்கம் தெளியவில்லையோ என்று எண்ணினான், ஆனால் ஸுராஜ் உண்மையிலேதான் அவளது மன்னிப்புக்கு மன்றாடினான்!

இரஜினி, என்னதான் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தால் மனம் மரத்துப் போயிருந்தாலும், ஓர் பெண்தானே! நெஞ்சிளகி விட்டது. அவள் 'குபுக்' கென்று அழுது விட்டாள். மண்டியிட்டிருப்பவன் ஒரு சுபேதார். அவன் அவளது மன்னிப்புக்கு, அதுவும் ஆண்டுபல உருண்டு அழித்துப் போடப்பட்ட ஒரு பழைய குற்றத்திற்கு, கேவலம் ஒரு ஆதரவற்ற, ஒரு விபசாரத்தால் நாறிப்போன பெண்ணிடம் மண்டியிட்டுவிட்டான்! அவள் வாளை வீசினாள், அவனோ தாளைத்தழுவுகிறான். காரணம் என்னவோ? நடிபபுத்தான் அப்படி நிலைமையைச் சிக்கலாகிற்றோ? அவள் திடீரென்று கீழே விழுந்து தழுவிக் கொண்டாள். அவன் முகத்தோடு முகம் பொருத்தித் தேம்பினாள். அவன் தேற்றினான்.

"காதலா, என்னை வங்கத்திற்கு அழைத்துப் போனால் உங்கள் பள்ளியறையின் கனக மணிக்கட்டிலைமட்டும் அலங்கரிக்க மாட்டேன், அரசாங்க வேலைகளையும் கவனிப்பேன். காரணம், வங்கத்திலே வட்டமிடும் 'வாழ்வுறிஞ்சிகள்' கூட்டத்துடன் எனக்குத் தொடர்புண்டு"

இந்த நேரத்தில் அங்கிருந்த சாளரத்தின் திரை அறுந்து விழுந்தது. அடுத்த கணத்தில் ஒரு சொருகுவாள் பறந்து வந்தது! அந்தோ, அவள் மார்பைத் துளைத்து விட்டது! பெண்மை சிரித்தது அங்கு. ஆண்மை அழுதது!

(தொடரும்)

அச்சகம், பத்திரிகை, ஆசிரியர், உதவி ஆசிரியர் வெளியீடு, மதிப்புரை - இந்த உலகம் தனி. அந்த உலகத்துக் கதை இது. கற்பனைதான் என்றாலும் பாத்திரங்கள் நாம் நேருக்கு நேர் சந்திப்பவர்களைப் போலத்தான் உருவாகியிருக்கின்றன.

தே. நாராயணன்

தன் வினை

உயர்திரு மெய்கண்ட பிள்ளை ஞானோதய அச்சகத்தை நடத்திவந்தபோது, தமிழ்நாடு அவ்வளவாக அவரைக் கவனிக்கவில்லை. "மழைக்குக்கூடப் பள்ளிக்கூடத்தில் ஒண்டாத இந்தப் பேர்வழி, 'தராசு' என்ற பத்திரிகை நடத்தப் போகிறாராமே! உலகானுபவம் இருக்கிறதென்றாலும் பத்திரிகைத் தொழிலுக்கும பரந்த உலக ஞானத்திற்கும் என்னய்யா சம்பந்தமிருக்கிறது?" என்று பெரிய தலைகளெல்லாம் பிள்ளையவர்களின் போக்கைப் புரிந்து கொள்ளமுடியாது தவியாய்த் தவித்தன; இபபொழுதுதான பிள்ளை கவனத்துக்குரிய ஆளாகிவிட்டார். என்னவோ, அவர்களுக்கு எழுந்த சந்தேகத்தை யெல்லாம் தெளிவு படுத்த, வந்தவர் போனவர்களிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டு தானிருந்தார் மெய்கண்ட பிள்ளையும்! "திறமை யாம் திறமை! பாழாய்ப்போன தகுதியும் திறமையும் பார்த்துத் தானே நாடு பாழாய்ப் போச்சு. டாக்டர்தான் கத்தி பிடிக்கவேண்டும் என்று ஏதாவது நியதி உண்டா? வீதியிலே போகிறவன்கூடக் கருப்புக் கோட்டை மாட்டிக்கொண்டு சட்டம் பேசினால், அவனும் தான் ஒரு வக்கில்! எழுதத் தெரிந்தவன் தான் பத்திரிகை நடத்தவேண்டுமென்று ஏதாவது சட்டமுண்டா? இந்தாப் பாருமையா! 'உதவி ஆசிரியர்' தேவை யென்று ஒருதடவை வரி விளம்பரம் போட்டேன். அதோ! மலைபோல விண்ணப்பங்கள் குவிந்து கிடக்கின்றன"— என்று மெய்கண்ட பிள்ளை சொல்லும்போது, உலகத்தையே நாம புரிந்து கொண்டது போன்ற உணர்வு தட்டும்.

பிள்ளையவர்கள் வந்துகிடந்த விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்தார். எல்லாம் மாணிக்கமாகத்தான் இருந்தன! இருந்தாலும், "தராசு" வின் முன்னேற்றத்திற்கு என் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்ய நான் தயாராயிருக்கிறேன்." என்ற விண்ணப்பம் பிள்ளையின் மனதிற்கு மிகப்

பிடித்தமாயிருந்தது. பெயரைப் பார்த்தார்—புரட்சிப் பித்தன்! கொஞ்சம் திகில்தான்! முடிவாக, அவரையே நேரில் வரும் படிகடிதம் எழுதிப் போட்டு விட்டார்.

பத்திரிகைத் தொழிலில் பிரவேசம் புதிதாயினும், மெய் கண்ட பிள்ளைக்குப் அந்தத் தொழிலுக்கும் நெடுநாளைய உறவு உண்டு. ஞானோதய அச்சகம் வைத்ததிலிருந்து குறைந்தது இருபது பத்திரிகைகளை யாவது அவர் அச்சிட்டுக் கொடுத்ததோடு, அவைகளின மென்னியைப் பிடித்து அமுக்கிய பெருமையும் அவருக்கே உண்டு. பத்திரிகையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடந்தவர்களெல்லாம் தங்கள் நிலைக்குக் காரணம் 'ஏஜண்டுகளின் பாக்கி' என்று கூறிச் சென்றிருக்கின்றனர். இந்தப் பொன மொழியை மட்டும் பிள்ளையவர்கள் மறந்து விடவில்லை!

கடிதப்படி, எழுத்தாளர் புரட்சிப் பித்தன் பேட்டிக்கு வந்திருந்தார். அவர்களிடையே நடந்த பேச்சு வார்த்தைகள் தமிழுக்கே இலக்கியம்; எழுத்தாளர்களுக்கோ அது ஒரு இலக்கணம்!

"தாங்கள் தானே புரட்சிப் பித்தன்!"

"ஆம்!"

"என்ன ஜாதியோ?"

"எழுத்தாளர் ஜாதி!"

பிள்ளையவர்கள் இந்த இடத்தில் வாய்விட்டுச் சிரித்த வண்ணம், "எழுத்தாளரே! அது போகட்டும்! எனக்குத் தகுதியோ திறமையோ அவ்வளவாகத் தேவையில்லை. உமக்குக் கையில் வலுவிருக்கிறதா, அதனை பயனுக என் பணம் பெருகுமா என்பதுதான் என்னுடைய கேள்வி; விளக்கமாகச் சொல்லுகிறேனே! உம்மை உதவியாகக் கொண்டு 'தராசு' நடத்துகிறேன் என்று வைத்துக் கொள்ளும; பத்திரிகை உலகத்துக்கே மூட்டைப்பூச்சிகளாக விளங்கும் ஏஜண்டுகள் இருக்கிருர்களே, அந்த மகானுபாவர்களிடம் நம பாக்கியை நேரிடையாகவும் சென்று வசூலிக்கப் போதுமான உடல் பலம் உமக்கிருந்தால் அதுவே போதுமானது! என்னடா இப்படிப் பேசுகிருனே என்று எண்ணுதிர்! உலகம் அபபடிப் போய்விட்டது. நாமும் அப்படிப் போகாவிட்டால், அரசமரத்துப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கவேண்டியதுதான்! ஏன் இவ்வளவு பச்சையாகக் கூறினேன் தெரியுமா! நிர்வாகம் அப்படி ஜருராக நடந்தால்தான் நீர் புரட்சிப் பித்தனுகவும் நான் காரியப் பித்தனுகவும் கொஞ்ச நாளைக்காவது திரிய முடியும்" என்ருர்.

'தராசு' ஆரம்பித்து ஆறு மாதங்களாய்விட்டன. தமிழ் நாட்டின் சந்துபொந்து, மூலை முடுக்குகளிலெல்லாம் 'தராசி'ன் பெயரும் புகழும் பரவா விட்டாலும் எல்லாக் கடைகளிலும் பத்திரிகை தொங்கிக் கொண்டிருந்தது. பிள்ளைக்கோ 'வீழ்ச்சி பயம்' விட்டபாடில்லை. அடிக்கடி புரட்சிப் பித்தன் அவருக்கு எதிர்கால ஆசையைக்காட்டித்தெம்புகொடுத்து

வந்தார். உண்மையில் தராசு நடத்தியதில் கையைக் கடிக்காததோடு, பிள்ளையவர்களுக்கு லாபக் குறியும் தென்பட்டது. "என்ன இருந்தாலும், பயல் திடீரென்று விலகினால்......" என்ற சந்தேகமமட்டும பிள்ளையவர்களின் பயத்தை வளர்த்தது.

இந்த உலகத்தில் சந்தேகம் தந்த எந்தக் காரியமும் ஒழுங்காக நடந்ததே கிடையாதாமே! அதே போல மெய்கண்ட பிள்ளை — புரட்சிப்பித்தன் இணைப்பும் இடைவெளி விட ஆரம்பித்தது. "9-மாதமாகியும் சம்பளம் இருந்த இடத்திலேயே இருக்கிறதே! கொஞ்சம் உயர்த்துங்கள்" — என்று கேட்டாராம புரட்சிப்பித்தன். உடனே, மெய்கண்டபிள்ளை வரவு செலவுக் கணக்கை வகையோடுகூறி, "9-மாதத்தில் ஒரு பெரிய நோட்டு கைப்பொருள் நஷ்டம்" என்று விளக்க அத்தோடு அச்சகத்து எழுத்துக்கள் அடியோடு தேய்ந்துபோனதையும் காட்டி, கடைசியாக 'முடியாது' என்று கூறிவிட்டாராம். அதன் பயனாக, 9-மாத காலமாகத் தானே 'ஆசிரியர்' என்று கூறி எழுததுலகை ஏமாற்றி வந்தாரே மெய்கண்டனார் அவரே வந்து அம்பலத்தில் ஆடநேர்ந்துவிட்டது. அதற்காக, அவரும மலைக்கவில்லை. பரிதாபத்திற்குரிய எழுத்தாளர் புரட்சிப் பித்தன் தன் நண்பன் மணியின் உதவியால் 'அனல் வெளியிட்'டை ஆரம்பித்துக் கனல் கக்கப் பல புத்தகங்கள் எழுதி வந்தார்.

மெய்கண்டனாருக்கோ புரட்சிப்பித்தன் மேல் அளவிலாத கோபம். 'மாபாதகன்; மண் குதிரைப் பயல்! உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்கிறோமே தத்தம் விட்டேனுபார்! என் வாழ்வு அவன் அழிவிலே தான் இருக்கிறது' என்று கர்வபங்கம செய்யக் காத்திருந்தார். பிள்ளையவர்களின் நண்பர்கள் வேறு அவரிடம் புரட்சிப்பித்தனின புத்தகங்களை மக்கள் வெகுவாக வரவேற்பதாகச் சொல்லி விட்டனர். அப்பொழுது பார்க்க வேண்டுமே பிள்ளையவர்களை! "பேனா பிடிக்கத் தெரியாத பயல்! இவன் குட்டு, திருட்டு, ஒட்டுவேலை மாரீசத் தனம—எல்லாம எனக்கல்லவா தெரியும்! அவனுக்கு நெஞ்சிலே உரமிருந்தால் அவன் எழுதிய புத்தகங்களைத் 'தராசின்' விமர்சனத்திற்கு அனுப்பச் சொல்லுங்கள், பார்ப்போம். ஒருகை பார்க்கிறேன்" என்று வரிந்து கட்டினார்.

இன்றையத் தேதியில் தமிழ் நாட்டு எழுத்துலகச் சிற்பிகளின் வரிசையில் மெய்கண்ட பிள்ளையின் பெயரும் சேர்ந்து விட்டது. அப்படிப்பட்டவர் இல்லாது மாநாடோ, கூட்டமோ நடக்குமா? மெய்கண்டனார் ஏதோ ஒரு மாநாட்டிற்குச் சென்று திரும்பினார். அன்றையத் தபாலில் தராசின் மேலான மதிப்புரைக்குப் புரட்சிப்பித்தன் தீட்டிய "அடிமை வாழ்வா?" என்ற புத்தகம் வந்திருந்ததைக் கண்ட பிள்ளை மேஜையின்மீது தன் பலங்கொண்டமட்டும் குத்தினார், ஆடினார்; பாடினார்!.........

அடுத்து வந்த 'தராசு' இதழில் புரட்சிப்பித்தனின்

புத்தகத்திற்குக் கீழ்க்கண்ட விதமாக மதிப்புரை வந்தது.

○○○○○○○○○○○○○○○

விமர்சனம்

அடிமை வாழ்வா?
—புரட்சிப்பித்தன்—

மேற்கண்ட புத்தகம் வரப்பெற்ேறாம். வந்தபின் அடைந்த வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. எவரிடம் கொடுத்தாலும மதிப்புரை செய்ய மறுத்து விட்டனர். காரணம் புலப்படவில்லை. பின்னர் படிக்க ஆரம்பித்ததுந் தான் விஷயம் புரிந்தது. டவரா டம்ளர் கழுவ வேண்டிய ஆட்களும், பால பாடமே படிக்காத நபர்களும் எழுத்துலகில் இறங்கப்போகத் தமிழ் குட்டிச் சுவராய் விட்டது. இதற்கு ருசு இந்தப் புத்தகமே! கருத்துக்கள் பெரும்பாலும் களவாடப் பட்டிருக்கின்றன. நடையோ பல்லை உடைக்கிறது. புத்தகத்தில் வரும் கதாபாத்திரங்களின் நடை, உடை, பாவனையெல்லாம் வெள்ளைக்காரத்தனமாக இருப்பதிலிருந்து ஆசிரியரின் கற்பனை பல இடங்களில் பல்லைக்காட்டி விடுகிறது. பக்கம்60; விலையோ இரண்டுரூபாய்! தமிழர்கள் இளிச்சவாயர்களாக இருக்கும் வரை இந்தப் புத்தகத்தில் மலிந்துள்ள பிழைகளைத் திருத்தி, 'அடிமை வாழ்வின் பிழை திருத்தம' என்று பத்துப்பக்கத்தில் போட்டு எட்டணாவுக்கு விற்ருல் கூட நாம் ஆச்சரியப்பட மாட்டோம். அசல் நகற் கொள்ளை!

இத்துடன் இன்னொரு முக்கியம் என்னவெனில் புத்தகந் தான் அப்படி யென்ருல்,

அதன் அட்டையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. என்ன வர்ணசேர்க்கை! அடடா! ஆசிரியரைப் பிடித்த சனியன், அச்சகக்காரனையும் பிடித்தாட்டியிருக்கிறது. படம் பார்த்ததும் ஒருமுறையும் படத்திற்கு வர்ணம் அப்பியிருக்கும் அழகைப் பார்த்தும் மறுமுறையும் வாந்தி எடுக்கத் தோன்றுகிறது. யாராவது ஒரு நல்ல நபர் இந்த வெளியீடு முழுவதையும் பழைய பேப்பர் விலைக்காவது வாங்கி, மக்களின் கண்காணாத இடத்தில் போட்டுவிட்டால் தமிழும் தமிழ் நாடும் அவருக்காக மிக மிகக் கடமைப்பட்டிருக்கும்.

—"மெய்கண்டம்"

o o o o o

விமர்சனம் வந்ததும் மெய்கண்ட பிள்ளை வெற்றிச் சிரிப்புச் சிரித்தார், ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்! இரண்டு நாள் கழித்து மெய்கண்டனுக்கு இரண்டு கடிதங்கள் வந்தன.

ஒன்று:

ஐயா,

வணக்கம். தங்களின் மேலான மதிப்புரையைப் படித்தேன். நக்கீரவாரிசு என்றால் தாங்கள் தான்! குற்றம் யார் செய்தாலென்ன! கண்டிப்பதைக் கண்டிக்கத்தானே வேண்டும். அந்தப் பெருங்குணம் தங்களைத் தவிர வேறு யாருக்கும் வராது. என் எழுத்தில் தாங்கள் கண்ட குற்றங்களை எடுத்துக்காட்டியதற்குமிக நன்றி! அத்தோடு, தங்களது ஞானோதயம் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட அட்டைப் படத்தைக் குறித்துத் தாங்கள் செய்திருக்கும் பாரபட்சமற்ற விமர்சனமும்மிகமிகப் பாராட்டுதற் குரியது.

தங்கள்,

புரட்சிப்பித்தன்.

மற்றொன்று:

அனல் வெளியீட்டகம்

பெரியீர்,

தங்கள் மதிப்புரையைப் பார்த்தேன். மிக மகிழ்ச்சி! தாங்கள் ஏதோ மாநாட்டிற்குச் சென்றிருந்த போது அச்சகத்திற்கு வந்தேன். தங்கள் மைத்துனர் இருந்தார், தாராசில் மதிப்புரை செய்திருக்கும் 'அடிமை வாழ்வா?' என்ற புத்தகத்திற்கு அட்டைப்படம் மட்டும் அச்சடிக்க வேண்டியிருந்தது. ஆர்டரும் கொடுத்தேன். அச்சுக் கூலியோ மிக அதிகம். தாங்கள் வந்ததும் குறைத்துக் கொள்ளலாமென்று எண்ணி, வேலையை முன்னதாக முடிக்கச் சொன்னேன். வேலை முடிந்ததும் சென்று பார்த்தபோது மிகமிக மோசமாக அச்சடிக்கப்பட்டுக் கிடந்தது. ஒரே கலர்க் குழப்பம்! நான் சொல்லுவதல்ல; தங்கள் மதிப்புரையே இதை ஒப்புக்கொள்கிறது. இன்னும் அது அடித்த வகையில் அச்சுக் கூலி ரூ. 25 பாக்கியுள்ளது. இனியும் அதை வசூல் செய்ய எங்களிடம் ஆள் அனுப்புவது வீண்தான் என்பது, உண்மையை ஒப்புக் கொண்ட தங்களுக்குத் தெரியாததல்ல.

தங்களன்புள்ள,

மணி

அனல் வெளியீட்டிற்காக.

மெ. சுந்தரம்

நாமும் அவர்களும்

வாழ்க்கையை வளமான சோலை என்று சிலரும், வறண்ட பாலைவனம் என்று சிலரும் சொல்கிறார்கள். ஒரு பொருளைப்பற்றியே இரண்டு விதமான கருத்துரைகள் வெளியிடப்படுகின்றன. இதனால் வாழ்வின் விருப்பு வெறுப்பிற்குக் காரணம், அவரவர்களின் மனோநிலைதான் என்பது தெரியவரும்.

இந்த வாழ்க்கையை நம் நாட்டுத் துறவிகள் "காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா" என்ற நம்பிக்கையில்லாச் சிந்து பாடி நாட்டம் இல்லாதவர்கள்போல் நடித்தனர். "இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லையே" என்று காலத்தை நினைத்துக் கண்ணீர் விட்டார் ஒரு காவி ஆடைக்காரர். யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, இன்பம் நிலையாமை, செல்வம் நிலையாமை என்ற நிலையாமைகளை அடுக்கிக்கொண்டே போயின நம் நீதிநூல்கள்.

"இதற்கு நாம் என்னப்பா செய்வது? எல்லாம் பூர்வ ஜென்ம பலன்" என்ற வேறு லகத்தைப் பற்றிய வேதாந்தப்பேச்சும், "அன்று எழுதினவன் அழித்தா எழுதப்போகிருன்?" என்ற இடிபபொடிந்த பேச்சும், "எல்லாம் அவன்செயலப்பா! நடக்கிறபடிதான் நடக்கும்" என்ற தெருத்திண்ணை வேதாந்தமும் தெருக்கோடிகளில்—திரு மடங்களில்—திருவிடுகளில் இன்றும் நடைபெற்று வருகின்றன. எதனால் இந்தப் பேச்செல்லாம்? நாட்டைப் பற்றிய நம்பிக்கை நம் உள்ளத்தைவிட்டு ஒட்டமெடுக்க அன்று ஆரியர் செய்த சூழ்ச்சி இந்த நிலையாமைத் தத்துவங்கள் எல்லாம். "நாட்டு இன்பத்தைப் பற்றிய, மனித வாழ்வின் இன்பத்தைப் பற்றிய — நல்ல எண்ணம் மனதில் விழுந்துவிட்டால் பின் நம்முடைய பிழைப்பு நடக்காதே; வேதங்களுக்கும, அவை கற்பிக்கின்ற வேள்விகளுக்கும் நாட்டிலே வேலையில்லாமல் போய்விடுமே; பழைய ஏற்பாடுகள் பயனற்றவை ஆகி ஏட்டளவில் நின்றுவிடுமே; சாத்திரங்களைக் காட்டி ஏமாற்றிப் பிழைக்கும் காலம் இனி ஏகிவிடுமே!" என்று எண்ணிய நயவஞ்சக நரிக்கூட்டத்தார் வாழ்க்கையை ஓர் கானல் நீருக்கு ஒப்பிட்டனர்; பரலோ

பத்தைப்பற்றிப் பாசுரங்கள் காட்ட் செய்தனர்; இன்பத்தை இரண்டாக்கினர், இம்மை, மறுமை என்று. "பூர்வ புண்ணிய பலன்" என்ற பொருந்தாத புதுக் கற்பனையை நாட்டிலே மிதக்கவிட்டனர்; இதனால் மக்கள் உள்ளத்திலே இருந்த வீரம் மடியச்செய்தனர். புரட்சி மனப்பானமைக்குப் புதை குழி தோண்டினர். கிளர்ச்சி எண்ணத்தைக் கிழுறச் செய்தனர்.

இதனால்தான், இடைக்காலத்தில் நம் புலவர்கள் இதிகாசங்களையும், புராணங்களையும் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் உள்ளத்திலேபுரட்சி எழும்பாதவாறு அவர்கள் உள்ளக் கிளர்ச்சி அடக்கப்பட்டது. ஆரிய நூல்களாலும் ஆரியர்களாலும், அவர்கள் புலமைப் பேராறு புரட்சிக் கழனியிலே—வயலிலே—பாய்வது தடை செய்யப்பட்டது. அவர்களால் போலிப் புராணக் கழனியில் பாயும்படி புகுத்தப்பட்டது. எல்லாவற்றிற்கும் காரணம் இடைக்காலத்தில் நம்முடன் வந்து சேர்ந்த வந்தேறிய குடிகளான ஆரியர்களின் அர்த்த சாஸ்திரங்களும், மனுஸ்மிருதிகளும், குருட்டு ஏற்பாடுகளுமேயாம். இபபடி நம்மைக் கிழ் நிலைக்குக் கொண்டுவந்து வாழ்க்கைத் தரத்தை மட்டமாக்கின நம்மவரின் ஏற்பாடுகள். ஆனல் அதே சமயத்தில் மேல் நாட்டவர் எப்படி நல்லகொள்கைகள் கொண்டு வாழ்வுப் பாதையில் முன்னேறிச் சென்றனர் என்பதை இப்பொழுது பார்ப்போம்.

"உன்னை நம்பு! ஒவ்வோர் உள்ளத்திலும் தன்னம்பிக்கை என்னும் தந்தி மீட்டுகிறது" என்கிறார் எமர்சன் என்ற அமெரிக்க அறிஞர்.

"எதையும் நம்பாதே! எல்லாம் மாயம்! எல்லாம் மகேஸ்வரனின் திருவிளையாடல்கள்" என்று உபதேசிக்கின்றன நம்முடைய உதவாக்கரைச் சமய நூல்கள்.

"கடவுளை நான் உனக்குக் காட்டுகிறேன்; என் சமயத்தில் சேர்" என்று வீண் ஆரவாரம் செய்கின்றன சில சமயங்கள். "இவர் கடவுளை நேருக்கு நேர் கண்டவர்" என்று விளம்பரப்படுத்தப்படுகின்றனர் சில வேதாந்தப் பெரியவர்கள். ஆனல் அதே சமயத்தில் கடவுள்பற்றி எமர்சன் என்ன சொல்லுகிறார் என்பதைக் காது கொடுத்துக் கேளுங்கள்!

"காலமும் இடமும் கண்களால் ஆகும் தூல நிறங்களே. ஆத்மா நிலைபெற்ற ஒளி. 'கடவுளை அறிந்தேன்' என்று பழைய குருட்டு வழக்கங்களுக்கு உன்னை இழுப்பவனை நம்பாதே"

கடவுளைக் "காமிரா"வுக்குள் அடைத்துக்காட்டும் கயவர்கள் நாட்டிலே பெருகிவிட்டனர் என்பதை மேலே உள்ள சொற்கள் நமக்குக் காட்டவில்லையா?

"சுயநலத்துடன் கெஞ்சுவது தோத்திரமன்று; வாழ்வின் உண்மைகளை உயர்ந்த நிலையினின்று சிந்திப்பதே தோத்திரம்" என்பது மேல்நாட்டான் கண்ட வழிபாட்டு முறை.

"கல்லைக் கட்டிக்கொண்டு கதறு; துன்பத்தை எல்லாம்

அவனிடம் சொல்லி அழு; துணை நிற்பான்'' என்றும்

''காசு நிறைய் வந்துவிட்டதப்பா! காளிக்கொரு பூசை போடு'' என்றும்

இன்று தமிழ்நாட்டில் ''பக்திப் பேச்சுக்கள்'' நடைபெற்று வருவதை நாம் அறிவோம்.

தன்னுடைய நன்மை கருதி யாவற்றையும் ஆண்டவனிடம முறையிட இடங்கொடுக்கிறது நம்முடைய வேதாந்தம். வெள்ளையன் வேதாந்தமோ ''கெஞ்சாதே! உன் உயர்ந்த இலட்சியத்தினின்று இறைவனை எண்ணிப்பார். உதவியை வாய்விட்டுக் கேட்காதே'' என்கிறது.

''உறுதியும் அன்பும் நம்மினின்று பெரிய கவலைச் சுமையை நீக்கும். என் உடன் பிறப்பாளர்களே! இறைவன் உண்டு'' என்று கூறும் எமர்சன் திருமொழிகள்.

உறுதிக்கு உலைவைத்து உலுத்தனுக்கும், நமது உன்னத சமய ஏடுகள். பலரைப் பாழ்படுத்திச் சிலரைச் சீர்படுத்தும் 'சமய ஏடுகள்' என்பதைக்காட்டிலும் 'சமயோசித ஏடுகள்' என்பதே முற்றும் பொருத்தம்.

''ஒவ்வொருவருக்கும் உயரிய ஒரு பணி உண்டு; அவனது புலமையே அப் பணி'' என்பது அமெரிக்கர் ஆராய்ந்து கண்ட முடிபு.

''பணி என்பது பகவான் ஆலயத்தை வலம் வருவதே. வாழ்த்தாத வாயும், தாழ்த்தாத தலையும், காணாத கண்ணும், கூப்பாத கையும் பயனற்றவையே'' எனத் தேவாரங்கள் தெய்வத்தின் திருத்தொண்டின் மகிமை பற்றிப் பேசும். பணி என்பதைப் படிப்பிலே கண்டார்கள் மேலைநாட்டார்; பணி என்பதைப் பக்தியிலே கண்டனர் நம் நாட்டார்.

''தன்னம்பிக்கையே வீரத்தின் சாரம்; அது களைப்பற்றது; அஞ்சாத் துணிவுடையது; தளரா உறுதி கொண்டது'' என்று முடிந்த முடிபாக நம்பிக்கைபற்றி முழங்குகிறார் எமர்சன். தன்னம்பிக்கையின்

வலிமையை இதைக்காட்டிலும் அதிகமாக யாரும் எடுத்துக் கூற முடியாது.

"உன்னால் ஒன்றும்முடியாது. நம்பிக்கை நாசம் தரும்; எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்புவித்துவிடு; பாரத்தை அவன் மேல் போட்டுவிடு; நடக்கிறபடி நடக்கட்டும்" என்று பரிதாபப் பல்லவிபாடுவர் நம்முடைய பக்திப் பெரியோர்கள். பக்தி, பக்தி என்று சக்தியை இழந்தோம். விதி விதிஎன்று மதியையிழந்தோம். சிந்தனைக்குச் சிறையிட்டோம்; அறிவை அரணுக்குள் அடைத்து வைத்துவிட்டோம. பகுத்தறிவைப் படுகுழியில் புதைத்துவிட்டோம். ஆராய்ச்சிக்கு அகழி வெட்டிவிட்டோம். அதனால்தான் இந்த அவலநிலை.

எந்த நாட்டில் பெண்ணானவள் கல்வியின் கடவுளாகப் போற்றப்படுகிறாளோ, அந்த நாட்டில் பெண் கல்வி மிகமிகக் குறைவு. எந்த நாட்டில் புத்தகத்தை மிதித்தால், தொட்டுக் கும்பிடுகிறார்களோ, அந்த நாட்டில் கல்வியின்நிலை, நூற்றுக்கு ஏழு பேர் படித்திருக்கிறார்கள் என்பதே. எந்த நாட்டில் "பூட்ஸ்"சின் கீழ் புத்தகம் மிதிக்கப்படுகிறதோ. எந்த நாட்டில் கல்விக்கென்று ஒரு தனிக்கடவுள் இல்லையோ அந்த நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்றுபேர் படித்தவர்கள். இந்தக்கல்வி நிலை எதைக் காட்டுகிறது? கடவுள் நம்பிக்கைக்கும், கல்விக்கும் தொடர்பில்லை என்பதைக் காட்டுகிறதல்லவா? பக்திக்கும் படிப்பிற்கும் தொடர்பில்லை என்பதை விளக்குகிறதல்லவா?

நாம கீழ் நாட்டார்; அவர்கள் மேல்நாட்டார். ஆம், உண்மையாகவே நாம் கீழ்நாட்டார்தான். கீழ்மை அடைந்த நாட்டார்தான். கொள்கையில், கல்வியில், சமயத்தில் ஒரு ஒழுங்கான முன்னேற்றம உண்டா? இல்லை. ஏன் இல்லை? நம்முடைய பண்டைக் காலத்து பக்தி ஏடுகள், அருள் நூல்கள் மேல்வீட்டை "மோட்சத்தை" நமக்குக் காட்டினவேயன்றி, மேலே மேலே வாழ்வில் எப்படி முன்னேறுவது என்பதைக் காட்டவில்லை. காட்டாததோடு மட்டுமல்ல, முன்னேற்றவீட்டின கதவையும் மூடிவிட்டன.

அவர்களும் தான் வாழ்கிறார்கள்; நாமும்தான் வாழ்கிறோம். அவர்கள் வாழ்க்கை மணமுள்ள மலர்; நம் வாழ்வு மணமிலா மலர். அவர்கள 'அணுதுண்டு' என்கிறார்கள்; நாமோ 'அரன் இங்குண்டு' என்று பாடுகிறோம். பாடுகிறோமா? பஜனையோடு மட்டுமா நின்றோம்? ஆடவும் செய்கிறோம். அந்த ஆட்டம், வாழ்க்கை முன்னேற்ற நாட்டமாக மாறவேண்டும். மாறினால் மறுமலர்ச்சி தழைக்கும். அப்பொழுதுதான், நாமும வாழ்கிறோம் அவர்களைப் போல என்று தலை நிமிர்ந்து கூற முடியும. இன்றைய இளைஞர் உலகந்தான் இந்தச் செயலை வெற்றியடையச் செய்ய முடியும். அடைக வெற்றி! உடைக தடையெலாம்!

வளரும் இலக்கியம்

பாரதிதாசன் கவிதைகள்

கவியரசர் பாரதிதாசனார் தனித்தனியே பத்திரிகைகளில் எழுதிய கவிதைகளை யெல்லாம் தொகுத்து இரண்டாம் பகுதியாக வெளியிட்டிருக்கிறார்கள். வானொலியிற் பாடிய இரண்டு பாடல்களும் இத் தொகுப்பில் உள்ளன. இன்னும், பாரதியைப் பற்றிய குறிப்புக்களைக் கவிதை வடிவில் ஆசிரியர் எழுதியிருப்பது பாரதியைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளத் துணை செய்கிறது. இத் தொகுப்பில், போர் மறவன், ஒன்பது சுவை, மெய்யன்பு, கூவாய் கருங் குயிலே, தொழில், புதுநெறி காட்டிய புலவன, இனப் பெயர், சர் பன்னீர்ச் செல்வம், திராவிட நாட்டுப் பண் முதலிய கவிதைகள் ஒப்பற்று விளங்குகின்றன. இத்தொகுப்பில், கவியரசர் காட்டும் புதுப்புது உவமைகள் நம் உள்ளத்தை யள்ளுகின்றன. நிலையாமைக்கு உவமையாகக் "கூத்தாடி மீசை"யைக் கூறுகிறார் ஆசிரியர், எத்தனை உண்மை! எத்தனை புதிது இவ் உவமை! பாரதியைப் பற்றிக் கூறும்போது, "பன்னீராயிரம் பாடிய கம்பனும் இன்தமிழ் உணர்வை எழுப்பியதுண்டோ?" என்று கேட்கும் போது 'இல்லை இல்லை' யென்று சொல்லவும் கம்ப தாசர்கள் தலை குனியும் காட்சியைக் காணவும் நேர்கிறது. ஆனந்த விகடனில் அந்நாளில "ரா. கி", "பாரதியார் உலககவியல்ல" என்றெழுதியதற்கு மறுப்பாக எழுதிய ஒன்பது எணசீர்விருத்தங்களும பாரதியின் உயர்வை எடுத்துக் காட்டி அவர் மாக் கவிஞர் எனக்கூறி வாதாடுகின்றன. திராவிட இனப்பற்று வேண்டும் என்பதைக் கூற வந்த கவிஞர் "நான் தான் திராவிடன் என்று நவில்கையில், தேன் தான் நாவெலாம் வான்தான் என்புகழ்" என்று பாடும் பொழுது திராவிடராய்ப் பிறந்த ஒவ்வொருவர் உள்ளமும் குளிர்கிறது. பன்மணித்திரள் என்ற தலைப்பிலே 'பாரத தேசமே' என்று முடியும் விருத்தங்கள் ஒவ்வொன்றும் பகுத்தறிவியக்கக் கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்து தருகின்றன, 'திராவிட நாட்டுப்பண்' இனிய பாடல். பாடத்தெரிந்த ஒவ்வொருவரும் பயின்று கூட்டங்களில் பாட வேண்டிய பண். அதைப் பாடும் வாய் மணக்கும்; கேட்கும் செவி குளிரும்; உள்ளம் உணர்வடையும்!

விலை ரூ 1—4—0, பாரதிதாசன் பதிப்பகம். 95, பெருமாள்கோவில்தெரு, புதுச்சேரி.

தமிழச்சியின் கத்தி

'தமிழச்சியின் கததி' கவியரசர் பாரதிதாசனால் தமிழகத்திற்குத்தரப்படும் 'புத்துணர்வு தருங் கருவி'. சுப்பம்மா என்ற தமிழ்ப் பெண்தான் கத்தி யேந்

தியவீரத் தமிழச்சியாக மாறுகிறாள் இக்காவியத்தில், சுப்பம்மாள் தோள் தழுவ ஆசை கொண்ட சூழ்ச்சிக்கார சுதரிசன்சிங் அவன் கணவன் திம்மனை நயமாக ஏமாற்றுகிறான்.

தேசிங்கின் பட்டாளத்தில் திம்மனைச் சேர்த்துவிடுவதாகவும், பொருள் நிறையச்சேர்க்க வழியுண்டெனவும் ஆசை காட்டுகிறான். செஞ்சி சென்றதும் தன் வஞ்சகத்தால் திம்மனையும் சுப்பம்மாவையும் தனித்தனியே பிரித்துவிடுகிறான். தன் வெறிக்குப் பலியாக மறுத்த சுப்பம்மாவை, மருந்திட்டு மயங்கவைத்து அந்தத் தீயன் தன் வெறியைத் தீர்த்துக்கொள்ளுகிறான் அந்தத் தீயனைத் தன் கத்தியால் குத்திக் கொன்றாள் தமிழச்சி சுப்பம்மாள். ஆட்சி செய்த தேசிங்கோ நடுநிலை தவறிச் சுப்பம்மாவைச் சித்திரவதை செய்ய ஆணையிட்டான். சுப்பம்மா அவன் மீது சாபமிட்டு அங்கேயே நெட்டுயிர்த்து வீழ்ந்திறக்கிறாள். இக் கதை வடநாட்டாரின் வஞ்சக உளத்தையும், தமிழர்களின் 'ஏமாளிப் பெருந்தன்மை'யையும் தமிழ்ப் பெண்களின் நிறை காக்கும் திறனையும் நன்கு விளக்குகிறது. விருத்தங்களும் இசைப் பாடல்களும் மாறி மாறி வந்து கதையை வளப்படுத்துகின்றன. கவிஞர், இந்நூல் 'தமிழச்சியின் கத்தி இரண்டாம் பிரிவு' என்று முன்னுரையில் குறிப்பிடுகிறார். முதற் பிரிவையும அச்சேற்றித் தருவாராயின் தமிழகம் மகிழ்வடையும். இதன் விலை ரூ. 1. பாரதிதாசன் பதிப்பகம் 95, பெருமாள் கோயில்தெரு, புதுச்சேரி.

தங்கத் தாமரை

தியாகம் என்கிறார்களே அதற்குப் பல உருவம் உண்டு. 'கொடியும் கூட்டமும் மட்டுமல்ல அதன் உருவம்' இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு 'தியாகத்தைப் பற்றிய ஒரு சிந்தனைக் களமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது இக் கதை, அண்ணன் தம்பியர் மூவர். அவர்களிலே ஒருவர் பள்ளிக்கூட ஆசிரியர்-எழுத்தாளர். அவருடைய எழுத்துக்கள் மக்கள் அறியாமை இருளை அகற்றும் ஒளி விளக்குகள். இருந்த இடத்திலிருந்துகொண்டே அவர் புரட்சி செய்கிறார். அடுத்தபடி ஒரு மாணவன் - செய்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகப் பள்ளியினின்றும் வெளியேற்றப்படுகிறான். அவன் சொற்பொழிவில் புரட்சிக்கனல் கொளுந்துவிட்டெரிகிறது. பட்டாளத்தில் சேர்ந்த மூன்றாவது ஆள் தன் வாழ்க்கையிலேயே புரட்சியை நடத்திக் காட்டுகிறான். இம் மூன்று கருத்துக்களின் போராட்டமாக எழுந்த இக் கதையில் 'மூன்றும' வேண்டியதுதான் என்ற கருத்தே முடிவாகிறது. இதற்கிடையிலே "வீட்டைத் திருத்திக்கொண்டு நாட்டுத் தொண்டு செய்யப் புறப்படுங்கள்' என்ற கருத்துடன் "நாடு நாடென்று சொல்கிறீர்களே, இந்த வீடென்ன காட்டிலா இருக்கிறது?" என்ற சொற்றொடர்களால் கொடுக்கப்படும் அறிவுரை வேறு. தில்லை வில்லாளனின் இக் கதை சிறந்து விளங்குகிறது. தேவையற்ற எதுகை மோனைகள் இதில் வந்து குவியவில்லை. விலை ரூபாய் 1. பாரி நிலையம். 59, பிராட்வே, சென்னை 1.

வேத்தரசன்

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI